௳

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] பிங்களஹு ஐப்பசிமீ [பகுதி-கஉ
Vol. XV. October—November, 1917. No. 12

ஸ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

பூர்வபீடிகை.

சிலப்பதிகாரமுதலிய சங்கநூல்களிற்சொல்லப்பட்ட சேரர்தலைநகராகிய வஞ்சிமாநகரம், கொங்கிற்கருவூராமென்று ஒருசாராரும், கடன்மலைநாட்டதென்று மற்றொருசாராரும் வாதப்பிரதிவாதமான வியாசங்களெழுதிப் புத்தகரூபமாகவும், பத்திரிகைவாயிலாகவும் வெளியிட்டுவந்திருப்பது பலரும் அறிந்ததே.

அவருள் கொங்கிற்கருவூராமென்பார் வாதகக்ஷியாரும், அஃதன்றென்பார் எதிர்வாதகக்ஷியாருமாகிறார்கள். இவ்விருதிறக்கக்ஷியுள் வாதகக்ஷியில் நின்று சேது சமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. ராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகை வாயிலாகவும், புத்தகரூபமாகவும் எழுதி வெளியிட்ட "வஞ்சிமாநகர்" என்ற வியாசமானது, படிப்பவர் பலரும் அதனுட்சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் உண்மையுள்ளனவோவென மயங்குமாறு புலமைத்திறமைகொண்டெழுதப்பட்டிருக்கிறது. அவ்விஷயங்கள் பலநூற்றாண்டுகளுக்குமுன்னரேயிருந்து பலகலையுமாராய்ந்த ப்ராமாணிகரான சைவவைணவ சமயாசாரிய பரம்பரையிலுள்ளார் கொள்கைக்கும், சிலப்பதிகாரநூலாசிரியர் உரையா

*

சிரியர்முதலிய புலவர்பெருமக்கள் கொள்கைக்கும், சங்கமருவியசான்ஞோராகிய நல்லிசைப்புலவர்கொள்கைக்கும் மாறுகத்தோன்றுவதால், அவற்றைப் பலருமாராய்ந்துதெளிந்தே அவற்றின் உண்மையுணரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவருள் நானுமொருவனுகையால் அதிற்காட்டிய பிரமாணங்களைக்கொண்டே என்னறிவிற்கெட்டியமட்டில் ஆராய்ச்சிசெய்ததில், எனக்குத்தோன்றிய ஆக்ஷேபங்களைப் பிறருமறியுமாறு மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவரான மாட்சிமைதங்கிய சேதுமன்னரவர்களிட்ட கட்டளையைமேற்கொண்டு இஃதெழுதப்படுகிறது.

வாதகக்ஷியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குமண்டலமானது 'கொங்கன்' என்னும் ஒரு சேரனாலாளப்பட்டதுபற்றிக் கொங்கனாடென்று பெயர் பெற்றிருப்பதாலும்,

(2) அது சேரனாட்டுக்குரிய 'குடபுலம்' என்னும் பெயர் பெற்றிருப்பதாலும்,

(3) சேரர்குலத்தவர் சிலரைக் கொங்கர்கோவென்று நூல்கள் வழங்குவதாலும்,

(4) சேரர்க்குரியதாகச்சொல்லிய கொல்லிமலை அக்கொங்குநாட்டின் அருகுள்ளதாயிருத்தலாலும், அது சேரமண்டலமேயாகுமென்றும்;

II. (1) அந்நாட்டிலுள்ள ஆம்பிராவதிநதிக்கு ஆன்பொருநையென்னும் பெயருண்மையால், அதுவே சேரர்க்குரிய குடபுலவஞ்சியை அடுத்தோடுவதாகச் சங்கநூல்களிற் சொல்லும் ஆன்பொருநையென்றும்,

(2) ஆதலால் அவ்வான்பொருநையாற்றையும் கொல்லிமலையையும் அடுத்துள்ள கொங்கிற்கருவூர்க்கு வஞ்சியென்னும் பெயருமுண்மையால், அதுவே அவ்விருபெயர்களுமொருங்குடையதாகச் சங்கநூல்களிற் கூறப்பட்ட குடபுலவஞ்சியாமென்றும்,

(3) இவ்வாற்றால் அகநாட்டுள்ளதாகப்பெறப்பட்ட குடபுலவஞ்சியைக்கடன்மலைநாட்டுள்ளதாகச் சிலப்பதிகாரவுரையாசிரியர் குறிப்பது தவறென்றும் கூறுவனவாம்.

இவ்விஷயங்களை நிரூபிக்கவேண்டி அவர்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதககூதிக்கனுகூலமாகும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும் பலவுள்ளன.

எதிர்வாதககூதியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குநாடு இடைநாடாயிருப்பதால் அது, புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்றும், குடகொங்கு, குடபுலம் என வழங்குதல் அந்நாட்டின் குடபகுதியையாதலா லது குணபுலம் என்பதுபோலும் மண்டலவாசகமாகாதென்றும்;

(2) ஆதலால் அது குடபுலமென்றுசொல்லப்பட்ட பழையசேரராஜ்யமில்லையென்றும்;

II. (1) பழையசேரராஜ்யத்திலுள்ளதாகச் சங்கநூல்களாலும், சிலப்பதிகார வுரையாசிரியர்களாலும் சொல்லப்பட்ட குடபுலவஞ்சியென்னும் கருவூரே சேரரது பழைய ராஜதானிநகரமென்றும்;

(2) கொங்குநாட்டுள்ள கருவூர் முன்பு குணபுலத்தரசராகிய சோழர்க்குரியதாயிருந்து பின்பு கொங்குநாட்டிற்சேர்ந்ததென்றும்;

(3) அதனையடுத்துள்ள கொல்லிமலை சோழருடைய கொல்லிமலையென்றும்;

(4) ஆதலால் அது சேரர்கொல்லிமலையாகாதென்றும்;

(5) சேரர்கொல்லி சேரர்நாடாகியகுடபுலத்துள்ளதென்றும்;

(6) சேரர்கருவூர்க்கருகோடுவதாகச் சங்கநூல்களிற்சொல்லிய ஆன்பொருநையாறு கொங்கிற்கருவூர்க்கருகோடும் ஆம்பிராவதிநதியாகாதென்றும்;

(7) அது சேரமண்டலத்திலோடும்பேரியாறேயாகுமென்றும்;

(8) பெயரொற்றுமைகொண்டு கொங்கிற்கருவூர் முதலியவற்றைச் சேரர்கருவூர்முதலியனவாகச்சொல்வது பொருந்தாதென்றுங் கூறுவனவாம்.

இவ்விஷயங்களைநிரூபிக்கவேண்டி இவர்சொல்லும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், வாதகக்ஷிக்கு அநுகூலமாகக்காட்டும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும்பலவுள.

இங்ஙனங்கூறும் இருதலைவிவகாரங்களும் பின்பு ஆங்காங்கு விவரித்துரைக்கப்படும்.

இவ்விருகக்ஷியுள்ளும், வாதகக்ஷியானது புதிதாயோருண்மையை நிலைநாட்டமுயலுதலால்,அது ஒருவாற்றானும் ஆக்ஷேபிக்கப்படாதிருந்தாலல்லது உண்மையை நிலைநாட்டமாட்டாதென்பது யாவருமறிந்ததே; எதிர்வாதகக்ஷியோவென்றால், அது தான்கொண்டகொள்கையை நிலைநாட்டவேண்டுமென்ற பொறுப்பொன்றுமின்றியே வாதகக்ஷிக்கு ஆக்ஷேபம்சொல்லும். அவ்வளவேகொண்டு எளிதில் வெற்றிபெறக்கூடிய வியல்புடையதாகுமென்பதும் யாவருமறிந்ததே. இவ்விரண்டனுள், உலகத்தோரறியாததொன்றைப் புதிதாகக்கண்டறியவேண்டி அரிதாகமுயன்றறிந்த தம்கொள்கையைப் பல பிரமாணங்களாலும், எதிர்வாதத்தாலாக்ஷேபிக்கப்படாதிருக்கும்படி நிலைநாட்டவேண்டும்பொறுப்புமிக்குடைய வாதகக்ஷியானது தோல்வியடைந்தாலும் அதனால் அதற்கு ஒரு சிறுமையுண்டாகமாட்டாது. அத்துணை பொறுப்பேலாது எளிதில் ஆக்ஷேபித்துநிற்கும் எதிர்வாதகக்ஷியானது வெற்றியடைந்தாலும்,அதனாலதற்கு ஒரு பெருமையுமில்லை. ஆதலால் உபயகக்ஷியினுமுண்டாகத்தக்க வெற்றி தோல்விகளாலுண்டாகும் பெருமை சிறுமைகளை விஷயமாகக்கொள்ளாது வாதகக்ஷியிற்சொல்லும் விஷயங்களின் உண்மையொன்றேயுணரவேண்டி அவற்றிலுள்ள ஆக்ஷேபங்களை எடுத்துக்காட்டத்தொடங்கிய இவ்வாராய்ச்சியுள் முதலில், வாதகக்ஷியார் சுருக்கமாகச்சொல்லிய முடிவுரையாயுள்ள "கொங்குகுடபுலமாம்" என்பதன் வாக்கியார்த்தத்தை விசாரிப்போமாக.

---

2. வாதமுடிவுரையாராய்வு.

1. வாதகக்ஷியினின்று வெளிவந்த 'வஞ்சிமாநகர்' என்ற வியாசத்தின் முடிவுரையாக "கொங்குகுடபுலமாம்" என்று தந்துணிபு கூறப்பட்டுள்ளது. இது, கொங்கிற்கருவூர்வஞ்சியைக் குடபுலவஞ்சி யென்று நிலைநாட்டுதற்கு எழுப்பிய 'வஞ்சிமாநகர்' என்னும் வியாசத் துக்கு அடிப்படையாக வைக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கையை வலியுறுத்தும்பொருட்டு 'வண்புகழ்மூவர்தண்பொழில்வரைப்பு' எனத் தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டியமண்டலங்களாக வரைந்து கொண்டு அவை குடபுலம், குணபுலம், தென்புலம் என்னும் பகுப் பிற் சேரர்க்குரிய குடபுலமும், கொங்குமண்டலமும் ஒன்றேயாம் என்னுங்கருத்தால், அது மேற்றிசைக்கணுள்ள நிலம் எனப்பொரு ளுரைக்கப்பட்டது. அக்குடபுலமென்னுஞ்சொல் திசைப்பெயரடுத்த பெயராயிருத்தலால், இன்ன இடத்திலிருந்து குடபுலம் எனப்பிரசித்தி பெற்ற ஓரிடத்தை எல்லையாகச்சுட்டி வரைந்துகொண்டாலல்லது அக் குடபுலமென்ற பெயர்க்குப் பொருளுணர்ச்சியுண்டாகமாட்டாதென் பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம். ஏனெனில், திசைப்பெயர்க ளெல்லாம் யாதேனும் ஓரெல்லையை அவாவிநிற்குமாகையால் எதி லிருந்து குடபுலம் என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும்; அதற்கு இயைபிரிதான குணபுலத்திலிருந்து குடபுலம் என்று கூறின் அக் குணபுலம் என்பதும் திசையடுத்தபெயராதலால் அதனையறிதற்கு அதற்கு இயைபிரிதான பழையகுடபுலமே எல்லையாகவேண்டும்; வேண்டவே ஒன்றனையொன்று பற்றுதலால், இன்ன இடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குணபுலமெனவும், இன்னஇடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குடபுலமெனவும் அறியமுடியாததாகும்; ஆகவே, அந்நிலையில் கொங்கு குடபுலமென்றுகூறுதல், மதுரை குட புலம் என்று கூறுதல்போற் பொருளற்றதாகவே முடியுமென்பது யாவருமறியத்தக்கது.

ஆனல் குடபுலமென்றசொல்லுக்குப் பொருளுணர்ச்சியேயில்லை யோவெனில்! இங்குக்கூறிய சேரமண்டலவாசகமான குடபுலமென்ற சொற்பொருளுணர்ச்சி உண்மையான குடபுலத்திலுண்டாவதன்றிக் கொங்கிலுண்டாகமாட்டாதென்று கூறியதல்லது, இன்ன இடத்தி லிருந்து என எல்லைபெறப்பட்ட சாதாரண திசையடுத்தபெயராகிய

குடபுலம் என்னும் சொற்பொருளுணர்ச்சியும் கொங்கிலுண்டாகமாட்டாதென்று கூறியதில்லையெனவுணர்க. இன்னஇடத்திலிருந்து என்னும் எல்லைகாட்டாது கூறும் சேரமண்டலவாசகமான குடபுலம் என்னும் சொல்லுக்கு உண்மையான சேரமண்டலத்திற் பொருளுணர்ச்சியுண்டாகுமென்பதைப் பின்பு குடபுலம் என்னும் சொற்பொருளாராய்ச்சியிற்காட்டுதல்கொண்டறியலாம். இதனால் இன்ன இடத்திலிருந்து கொங்குகுடபுலம் என்று நிச்சயிக்கமுடியாதநிலைமையில் "கொங்கு குடபுலம்" என்று வாளாகூறும்வாக்கியத்தால் தொடர்மொழிப்பொருளுணர்ச்சியுண்டாகமாட்டாதென்பது பொதுவாகக்காட்டப்பட்டது.

2. இனி, கொங்கு குடபுலமாம் என்னும் வாக்கியத்தில் எழுவாயாய்நிற்கும் கொங்கு என்னும் சொற்குப் பொருள் யாதென விசாரிப்பாம். வாதகக்ஷியிலுள்ள "வஞ்சிமாநகர்" என்ற வியாசத்துள்ளே 'கொங்கு' என்ற சொல்லின்பொருள் விளக்கவேண்டி, கொங்கன் என்னும் சேரனால் ஆளப்பட்டமையால் அது 'கொங்கநாடு' என்றும், 'கொங்கு' என்றும் பெயர்பெற்றதென்று கூறி, "கொங்கனெனவிள்ளுங் கோதைநனியாண்டதொருகொங்குவளநாடு" * எனப்பிரமாணமுங்காட்டப்பட்டுள்ளது. அஃதுண்மையேயாகுக. அக்கொங்கன்வந்தாளுதற்குமுன்னே அந்நாடு இன்னபெயருடையதாயிருந்ததென்று விளங்காமையால் அது முன்பு காடாயிருந்திருக்கலாமென்றும், அதனை முதன்முதல் நாடாக்கியாண்டவன் கொங்கன் என்னும் இயற்பெயருடையானொருசேரனென்றும், அந்நாடுண்டாகவே அதற்குப்பெயரிடவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தபொழுது அக்கொங்கன்பெயரால் அது கொங்கநாடு என வழங்கப்பட்டதென்றும் கொள்ளவேண்டும்; கொள்ளவே, கொங்கனுக்குமுந்தியே சேர்பரம்பரையிருந்ததென்றும், அப்பரம்பரையிலுள்ள சேரர்களிருந்தாண்டுவந்தநாடு கொங்கநாட்டின் வேறாயிருக்கவேண்டுமென்றும், அந்நாட்டையாண்டவர் சேரராதலால் அது இன்றும் சேரநாடு † என்னுமொருபகுதியையுடைய

---

* வஞ்சிமாநகர் பக்கம். (5)

† கடன்மலைநாட்டின் 'சேரநாடு' என்று ஒருபகுதி இன்றும் நியாயஸ்தல வியவகாரங்களில் வழங்கப்பட்டுவருகிறதென்று பாலைக்காட்டூர் ஸ்ரீமான், ராவ்பகதூர் ஜ. சின்னசாமிபிள்ளையவர்கள் சொல்லத்தெரிந்தேன்.

கடன்மலைநாடாமென்றும் அறியப்படுதலால், கொங்குவேறு; குடபுலமாகிய பழையசேரர்நாடுவேறு என்பதே பெறப்பட்டு, கொங்கு குடபுலமாம் என்பது சித்தியாதாயிற்று.

3. இவ்வாறன்றிப் பழையசேரராண்டுவந்தநாட்டினையே கொங்கன் என்னும் சேரன்வந்து சிறப்பாயாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதென்றுகொள்வோமாயின், அது அச்சேரனாலாளப்பட்ட சேரமண்டலமாகிய குடபுலமுழுதையு முணர்த்தும்பெயராயிருக்கவேண்டும். சேரமண்டலப்பகுதியாகிய குட்டநாடு முதலியவற்றிற்கு, கொங்கநாடு என்னும் பெயர்வழக்கில்லாமையால் அது பொருந்தாதென்க.

4. இனி, பழைய சேரநாடாகிய குடபுலத்தின் கீழ்பாலாகிய ஒருபகுதியைக் கொங்கன்என்னும் சேரன் பிரித்தாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதெனில், அதற்குமுன் அந்நாடு பெயரில்லாதிருந்ததா என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும். பொதுமையிற்சேரமண்டலமென்று பெயர்பெற்றிருந்து அதிலொருபாகம் கொங்கனுக்குரியதானதுபற்றிக் கொங்கநாடாயிற்று எனில், அக்கொங்கன் சேரமண்டலாதிபதியான பேரரசனா? அல்லது சிற்றரசனா? என்ற வினாவெழுகின்றது. பேரரசனாயிருந்தானென்றால் தொன்றுதொட்டுவழங்கிவந்த பிரதானப்பெயரைமாற்றி வேறு புதுப்பெயர் வைக்கவேண்டியகாரணமில்லை; சிற்றரசனாயிருந்தானென்றால் அவனாலாளப்படும் அந்நாடு சேரமண்டலத்தின் பிரதானராச்சியமாகமாட்டாதன்றோ! இவ்வாறாகவும் அக்கொங்குநாடு சேரரது பிரதானராச்சியத்தினின்றும் வேறென்றேகொள்ளப்படுதலால் கொங்கு குடபுலமாமென்று ஒன்றாகக்கூறுதல் பொருந்தாததாயிற்று.

5. இன்னும் இக்கொங்குநாடு, ஆதிதொட்டுப்பெருகியநிலையிலில்லையென்றும், நாளடைவிற்பெருகியதனால் தொண்டைநாடுபோல இக்கொங்குநாடும் ஒரு தனிமண்டலமாயிற்றென்றும், அதனாற் பின்பு தமிழ்நாடானது சேரமண்டலம், பாண்டியமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் என ஐந்துமண்டலங்களையுடையதாயிற்றென்றும் வாதகக்ஷியால் அங்கீகரிக்கப்பட்டு "வியன்றமிழ்நாடைந்து" * எனப் பிரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது.

* இக்கருத்து வஞ்சிமாநகர் 5, 6-வது பக்கங்களிற்காண்க.

அதன்படி, குடபுலமாகத் தாம்சொல்லும் அக்கொங்குமண்டலத்தின் பெருக்கம் அதனையடுத்துள்ள குணபுலமாகிய சோழமண்டலத்தின் ஒருபாகத்தைத் தன்னகத்துக்கொண்டன்றோபெருகியிருக்கவேண்டும்? * அப்படியானால் கொங்குமண்டலத்தின் கீழ்கடைசியையடுத்து, பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள ஆனிலைக்கருவூரும், கொல்லி மலையுமுள்ள நிலங்கள், பழைய நூல்களிலும் சிலாசாசனங்களிலும் சோழர்க்குரியனவாகச்சொல்லும் பிரமாணவாக்கியங்களைத் தழுவி எதிர்வாதகக்ஷிக்கநுகூலமாயும், வாதகக்ஷிக்குப்பிரதிகூலமாயும் சோழருடையனவாகவே முடிதலால், கொங்கு குடபுலமென்றுசொல்லவே யிடமில்லாமற்போவதுமன்றி, அதற்குவிரோதமாகக் கொங்குகுணபுலமென்று சொல்லவுமிடங்கொடுக்கும்போலிருக்கிறது.

இனிக் கொங்குநாடு நாளடைவிற்பெருகியதற் கிவ்வாறுகாரணம் சொல்லாமல் சேரர்நாட்டையே தன்னகப்படுத்திப்பெருகியதென்று கொண்டாலும், குடபுலமாகிய அச்சேரமண்டலத்திற் கொங்குமண்டலத்தரசர்க்குரிமையில்லையெனக்காட்டிக் கொங்குவேறு குடபுலம் வேறு என்பதையே வலியுறுத்தி வாதகக்ஷியையே விரோதிப்பதாகும்.

6. அன்றியும் முதலிற் சேர சோழ பாண்டிய ராச்சியபேதத்தால் அவரவர்பெயராற் பிரதானமண்டலங்கள் மூன்றும் பெயர் பெற்றுள்ளன. பின்பு பிரதானமான சோழமண்டலத்தின் பகுதியாக அச்சோழமண்டலத்தினின்றும் தொண்டைமண்டலமுண்டாயினமையால், அது சோழமண்டலத்தினின்றும் அப்பிரதானமானதாற் சோழமண்டலமென்னும் பழையபெயரைத் தான்கொள்ளாது தொண்டைமண்டலம் என்ற புதியபெயர்பெற்றுள்ளது. அவ்வாறே பின்பு உண்டாகிய கொங்குமண்டலமும் சேரமண்டலம் என்ற பழையபெயர் பெறாது புதியபெயர்பெற்றிருக்கிறது. ஆதலாற் கொங்குமண்டலத்தைக்குடபுலமென்று வைத்துக்கொண்டாலும், உபயகக்ஷியிலும் குடபுலமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட சேரமண்டலத்திற்குக் கொங்குமண்டலம் அப்பிரதானமென்பதே பெறப்படுகிறது: இதனாலும் சேரர்களின் அப்பிரதானராஜ்யமானகொங்கு சேரர்களின் பிரதானராஜ்ய

---

* வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பைத்தவிரத் தமிழ்நாட்டில் வேறு வெற்றுநிலமில்லையென்னும் தங்கொள்கை இங்கு மறக்கற்பாலதன்று.

மாகிய குடபுலமாகாதெனவறியலாம். ஆதலாற் கொங்குநாடு பழைய சேரர்நாடாயில்லாமற் காடாகவேயிருந்து பின்பு கொங்கன் என்னும் சேரன்வந்து காடுகெடுத்து நாடாக்கியாளப்பட்டுப்பெருகியதென்றே வாதகக்ஷியாரும் ஒப்புக்கொண்டுதீரவேண்டும். இதுகாறுங் கூறியவாற் றால் "கொங்கு குடபுலம்" என்ற வாக்கியாவயவமாய் எழுவாயாக நிறுத்த,'கொங்கு'என்ற சொற்பொருளாராய்ச்சியொன்றனே பலபடி யாலுங் கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டது.

7. இனிக் குறித்துவருகிளவியாகிய "குடபுலம்"என்னும் சொற் பொருளையும் ஒருவாறு ஆராய்வாம். குடபுலமுதலிய திசைப்பெய ரடுத்தபெயர்களுக்குப் பொருளுணருங்கால் இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லையையேனும், அல்லது இன்ன இடத்துக் குள் என்னும் அகப்பாட்டெல்லையையேனும் வெளிப்படையாலாயி னும், குறிப்பாலாயினும் கொள்ளாமற்பொருளுணரவியலாதென்பது யாவர்க்குமொப்பமுடிந்ததே.

இங்கெடுத்துக்கொண்ட குடபுலமுதலிய மண்டலப்பெயர்களுக்கு இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லை ஒருவகையானும் பெறப்படாமையால் அதனையொழித்து இன்ன இடத்துக்குள் என்னும் அகப்பாட்டெல்லையையே குறிப்பாற்கொள்ளவேண்டும். அஃதியாதெனவாராயின், குடபுலமுதலிய சொற்கள் "வடவேங் கடம்" "தென்குமரி"என்பனபோலத் திசைப்பெயரடையுடைய தமிழ் வழக்காயிருத்தலால் தமிழ்வழங்கும் நாட்டுள் என்னும் அகப்பாட் டெல்லை குறிப்பாற்பெறப்படுவதாம். பெறவே குடபுலம் என்பதற்குத் தமிழ்வழங்கும் நாட்டுள் குடதிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் என்று பொருள்கொள்ளப்படும். (இதுவே சேரமண்டலம்) இவ்வாறே 'குணபுலம்' என்பதற்கு, தமிழ்வழங்கும் நாட்டுட் குண திசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் (இதுவே சோழமண் டலம்) எனவும், தென்புலம் என்பதற்கு, தமிழ்வழங்குநாட்டுள் தென் றிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் (இதுவே பாண்டிய மண்டலம்) எனவும் பொருளுரைக்கப்படும்.

இதனால், சேரசோழபாண்டியமண்டலங்கள் மூன்றும் முறையே தமிழ்நாட்டின் மேல்கடல், கீழ்கடல், தென்கடல்களையடுத்துள்ளனவாய் அவ்வக்காலத்து அவரவர் தகுதிக்கேற்றவாறு நிலப்பரப்பின் அளவு மிக்கும் குறைந்தும் வேறுபட்டுநிற்குமென்க. இம் மும்மண்டலங்களுக்குமிடைவரம்பாயிருந்தன யாவெனவாராயின், ஒருதரையில்வாழும் பேரரசர்நாடுகளை வேறுபடப்பிரித்தற்குரிய இயற்கையரணாகிய மலைத்தொடரும் அடவிகளுமாயிருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இவற்றையெல்லாம் இராமாயணத்தாலுமறியலாம். சரித்திரவாராய்ச்சிக்கு எட்டியமட்டில் மிகப்பழமையுடையதாகக்கருதப்படும் இராமாயணகாலத்திலேயே இத்தமிழ்நாட்டுள் * சேர சோழ பாண்டியமண்டலங்கள் சுராஜ்யங்களாயிருந்தனவென்றும், அவற்றுட்பாண்டியமண்டலராஜதானிநகரம் தாமிரபருணியாற்றுக்குத்தெற்கேயிருந்த † கவாடபுரமென்றும் சொல்லப்பட்டமையால் தென்புலமென்று சொல்லப்பட்ட பாண்டியமண்டலம் தென்கடலறுதியாயிருந்ததென்று வெளியாகிறது. அவ்வாறே குணபுலமென்று சொல்லப்பட்ட சோழமண்டலம் கீழ்கடலறுதியாகவும், குடபுலமென்று சொல்லப்பட்ட சேரமண்டலம் மேல்கடலறுதியாகவுமிருந்தனவென்பதையும், அவற்றுக்கிடையே மலைத்தொடருமடவிகளுமாகிய நிலப்பரப்பே மிக்கிருந்தனவென்பதையும், எழுபத்திரண்டுவெள்ளம் வானரசைனியங்களுடன் ஸ்ரீ ராமபிரான் கிஷ்கிந்தையினின்றும் பிரயாண

---

* வான்மீகராமாயணத்திற் கிட்கிந்தாகாண்டத்துள் நாற்பத்தொன்றும் ஸர்க்கத்துள்ளன.

"ததைவாந்த்ராம்ஶ்ச புண்ட்ராம்ஶ்ச சோளாந் பாண்ட்யாந் ஸகேரளாந்"

† தாம்ரபர்ணீம் க்ராஹஜுஷ்டாம் தரிஷ்யத² மஹாநதீம் । ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணிவிபூஷிதம் ॥ யுக்தம் கவாடம் பாண்ட்யாநாம் கதா த்ரக்ஷ்யத² வாநரா: । தத: ஸமுத்ரமாஸாத்ய ஸம்ப்ரதார்யார்த²நிஶ்சயம் ॥ (யுக்தம் - யோக்யம்; த்ரக்ஷ்யத² என்றமையால், த்ரஷ்டும் யோக்யம் என்க; பார்க்கக்கூடிய கவாடபுரமென்றபடி.)

மாய்த் தமிழ்மும்மண்டலத்துள்ளும் சாராத அரணியங்களினிடை யேசென்று சேதுவழியிலங்கைபோய் மீண்டமையாலறியலாம். இக் கொள்கையை வாதகக்ஷியாரும் அங்கீகரித்துள்ளார் என்பதைக் கொங் கிற்கருவூர்க்குக் கரபுரம் என்னும் பெயர்க்காரணவாராய்ச்சியில்,உறை யூர்ப்பக்கம் "திரிசிரா" என்னும் அரக்கனிருந்தவிடமாதல்பற்றித் திரிசிராப்பள்ளியானதுபோல * "கரனென்னுமரக்கனிருந்தவிடமா தல்பற்றிக்கரபுரம் என்னும்பெயர் வந்ததுபோலும்" எனக்கருதினமை யாலறியலாம். ஆதலாற்கரபுரப்பக்கமாகிய கொங்குநாடும்,உறையூர்ப் பக்கமாகிய சோழநாட்டுப்பகுதியும் அக்காலத்து இராக்கதர் வசித்த காடாயிருந்ததென்பது நிராக்ஷேபமாயிற்று.

இன்னும் தொல்காப்பியப்பாயிரவுரையுள் "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து" என்றதன் விருத்தார்ந்தங்கூறுமிடத்து, 'தேவரெல் லாருங்கூடி "யாஞ்சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து, 'தென்றிசை யுயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்" என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக்கட்போதுகின்றவர் .... ‡ துவாரபதிப் போந்து † நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையுங்கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்து இராவண னைக்கந்தருவத்தாற்பிணித்து இராக்கதரை ஆண்டியங்காமைவிலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைநோக்கி நீ சென்று குமரியாரைக்கொண்டுவருக' எனக்கூறியவரலாற்றால், அக்காலத்துச் சேரசோழபாண்டியமண்டலங்களுக்கிடைப்பட்டு நாடாகாத காடுகள் மிக்கிருந்தனவென்றும், அவற்றுள் இராக்கதரே வாழ்ந்தனரென்றும், அவரையங்கணுசாதுவிலக்கி அக்காட்டுட் பதினெண்குடி வேளிருள் ளிட்டாரையும், அருவாளரையுங் குடியேற்றி நாடாக்கித் தாம்பொதி யிலிருந்தனரென்றும் அறியக்கிடத்தலால், அருவாளர் முதலிற்குடி யேறினமைபற்றி "அருவாநாடு" என்று பெயர்பெற்றதொருபகுதி

---

* வஞ்சிமாநகர் பக்கம் 116, 117.

‡ துவாரபதி - யாவலிகுலத்தரசிருந்த ஊர்.

† நிலங்கடந்தநெடுமுடியண்ணல் - மாவலி; நிலங்கடந்த நெடியதிருவடி நிலேயே முடியாகவுடைய அண்ணல் என்பதாம். "மண்டின்றபாணம்" "வடக்கோடுதேருடையான்" என்பனபோலுமிது.

யையடுத்துள்ள கொங்கின்புடை வேளிருள்ளிட்டார் குடியேறியிருக்க வேண்டுமென்பதும், கொங்குநாட்டில் வேளிர்கள் மிக்குள்ள காரணத்தாலறியலாம். இதுவேயுமன்றிக் காந்தன் என்னும் சோழன் காவிரியாற்றை அகத்தியரனுக்கிரகத்தாற்குடவரையினின்றுகொணருங்காற் கொங்கினிலம் காடாயிருந்தமையே காவிரி சோழர்க்கேயுரியதாதற்கும் காரணமாயிருக்கிறது. ஆதலானும் குடபுலமாகிய சேரமண்டலம் மேல்கடலை அடுத்திருந்ததென்பதும், குணபுலமாகிய சோழமண்டலம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதும், நன்குணரலாகும்.

இதுவேயுமன்றி அக்காலத்திற் சோழராஜதானிநகரம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதை, அதிலிருந்தரசாண்டுவந்த காந்தன் என்னும் சோழன், பகைக்குலமறுத்துவரும் பரசுராமனொடு போர்பொருதற்கு அஞ்சி ஒளித்திருந்தகாலத்தில் அச்சோழனுடைய காவற்கணிகை மகனாகிய ககந்தனென்பவன் அரசுபுரிந்து அந்நகரைக்காத்தமையால் அவன்பெயரால் அந்நகரத்துக்குக் * காகந்தியென்று பெயராயிற்றென்று காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றி மணிமேகலையுட்கூறுதலானும் அறியலாம்.

இவ்வாறே சேரமண்டலம் மேல்கடலையடுத்திருந்ததெனப் பதிற்றுப்பத்துமுதலிய பல நூல்களுங்கூறுதலேயன்றிப் புறநானூற்றுள் † விழுநீர்வேலிநாடுகிழவோன்" எனச்சேரனைக்கூறினமையாற் குடபுலமாகிய சேரமண்டலம் வேலிபோலரணாயமைந்த குடகடலால் வரையப்பட்டதென ஒருபுறத்தின் எல்லையும் நிராக்ஷேபமாயறியப்பட்டது. இனி அந்நாட்டின் மற்றொருபுறத்தெல்லை யாதாயிருக்குமோவெனவாராயின் அது அநுபவசித்தமாகவே அந்நாட்டிற்கு இயற்கையரணாயமைந்துள்ள மேற்குமலைத்தொடரென வழங்கும் மலயபர்வதவரிசையேயாகுமென்பது யாவருமறியலாம்.

---

* மணிமேகலை 22-ம் காதை 25-ம் அடிமுதற்பார்க்க.

† புறநானூறு செ-ள். 13.

அன்றியும், இக்குடபுலத்தைப்பற்றிப் புறநானூற்றுள் பதினேழாம்பாட்டில், "குலையிறைஞ்சியகோட்டாழை, அகல்வயல் மலைவேலி, நிலவுமணல்வியன்கானல்..................வரையாவீகைக் * குடவர் கோவே". என்றதனால் கடல்வேலியொருபுறமிருப்பதைத் தழுவிக் கொண்டே மற்றொருபுறம் மலைவேலியுமுடையதாகக் குடவர்கோவுக் குரிய தொண்டிராஜ்யமாகிய குடபுலத்தைவிசேடித்தமையால் மலையும், கடலும் வேலியாகவரைந்துகொள்ளப்பட்ட மலைமண்டிலமே குடவர் கோவுக்குரிய குடபுலம் என்பது பெறப்படுகிறது.

இன்னும் இக்குடபுலம் மலைவேலியிற்சிறந்ததென்பதை, * "சீருடைத்தேத்தமுனைகெடவிலங்கிய, நேருயர்நெடுவரை அயிரை" என்பதனாலும் அறியலாம். இப்பாட்டில் 'சீருடைத்தேத்த' என்றதனால் நாட்டினிடைப்பட்டிருந்து சிரழிக்காது ஒருபுடையொதுங்கி வேலிபோ லரணாய்வாய்ந்த மலையென்பதும், 'முனைகெட' என்றதனால் சிறுகாப்பிற்பேரிடத்ததாகுமரணமென்பதும், விலங்கிய என்றதனால் பிறர்நாட்டோடு தன்னாடு ஒருவாற்றானும் விரவாதவண்ணம் குறுக் கிட்டுக்கிடப்பதென்பதும், நேருயர்நெடுவரை என்பதனால் உலகப்பிர சித்தமாயாருமறியும்படி செவ்வேயுயர்ந்து தன்னாட்டினது நெடுமை யிற்குறையாது நீண்டுகிடப்பதென்பதும் பெறப்பட்டன.

---

* இப்புறப்பாட்டினுள் குடவர்கோவென்றதற்கு குடநாட்டார்கோ வென்று உரையெழுதப்பட்டிருக்கிறது. "குடநாடு" என்பது கொடுந்தமிழ் நாட்டினுளொன்றாகிய குடநாட்டைமட்டுஞ்சுட்டாது குடபுலமுழுதும் சுட்ட வல்லதென்பதை, "குடக்கோ" என்பதற்கு அடியார்க்குநல்லார் குடதிசைக் கோவென்று உரையெழுதினமையாலும், இது குடபுலமுழுதையுமுணர்த்து மென்பதை, "வஞ்சிமாநக" ரின் பக்கம் 17-வரி 19ல் தாமே ஒப்புக் கொண்டிருப்பதாலுமறியலாம். "தண்கடல்வேலிநின்குடநாடற்றே" என்புழிக் குடநாடென்பதற்குக் கொடுந்தமிழ்நாட்டினுளொன்றெனப்பொருள்பண்ணிக் கொள்வதுபோல இங்கு அப்பொருள்கொள்ளவியலாதென்பதை, இச்சேரன் வேந்துதந்தபணிதிறையாற் சேர்ந்தவர்கடும்பார்த்தும் ஓங்குகொல்லியோடு பொருநனாகிய பேரரசன் என்பதனாலறிக. இங்ஙனங்குடவர்கோவென்புழிக் கொடுந்தமிழ்க் குடநாடனென்றே பொருளாமெனக்கொள்ளுதல் அபார்த்தமாகு மென்பது பின் "குடவர்கோமான்" என்னும் சொற்பொருளாராய்ச்சியிற்காட் டப்படும்.

* பதிற்றுப்பத்து செய்யுள் உக.

இவ்விலக்கணங்களையெல்லாமுடையது அயிரை, மலயம், பொதியில், சையம் என்னும் தொடக்கத்துப் பலபெயர்களையும் பல சிகரங்களையுமுடைய குடவரை எனவுணர்க. இதற்கு மலயம் என்றபெயருண்டென்பதை "நீடுநிலைமலயம்பிற்படச்சென்று" என்ற சிலப்பதிகாரத்தாலறியலாம். நீடுநிலையென்று சிறப்பிக்கப்பட்ட இம்மலையினது நீட்சி குமரிக்கோடுதொடங்கி விந்தியமலையுங்கடந்து நீண்டதென்பதை வான்மீகத்தில் காவேரிபிறக்கும் மலைத்தொடரையும் (I) அதற்கும்வடக்குள்ள மலைத்தொடரையும் (II) மலயபர்வதமென்று வழங்குதலாலறியலாம். இதனாலேயே ஸஹ்யபர்வதமும் மலயபர்வதமும் ஒன்றென்றறியலாம்.

இது இத்துணைநெடிதாயிருப்பதுபற்றியே *"அயிரைநெடுவரைபோலத் தொலையாதாகநீவாழுநாளே" எனத் தலைவனுக்கு மிகநீண்டிருக்க வேண்டிய வாழ்நாளுக்குவமையாகக் கூறப்பட்டதெனவுணர்க. இவற்றால் இத்தகைய நெடுமைவாய்ந்த குடவரையென்னும் மலயபர்வதத்தைக் கீழ்பால்வேலியாகவுடையநாடே குடபுலமென்று சொல்லப்படும் சேரராஜ்யமெனவறிக.

(I) 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌥 𑌕𑌾𑌵𑍇𑌰𑍀𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌮𑌪𑍍𑌸𑌰𑍋𑌗𑌣𑍈𑌃 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍀𑌨𑌂 𑌨𑌗𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑍇 **𑌮𑌲𑌯𑌸𑍍𑌯** 𑌮𑌹𑍌𑌜𑌸𑌂 ॥
𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌥𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌮𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌮𑍃𑌷𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌂 ॥

(II) 𑌯𑌥𑌾 [illegible] 𑌦𑌾𑌨𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 ।
𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌤𑍇 𑌦𑍇𑌵𑍀 **𑌮𑌲𑌯𑌂** 𑌵𑍃𑌤𑌿𑌪𑌰𑍍𑌵𑌤𑌂 ॥
𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑍇𑌷𑍁𑌦𑍍𑌵𑌿𑌷𑍋 **𑌮𑌲𑌯𑌸𑍍𑌯** 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌤𑌃 ॥

* பதிற்றுப்பத்து செய் - ௭௦.

வேலியென்பது ஒருபுலத்தின் நடுவிலில்லாமல் அப்புலத்துக்குப் பாதுகாப்பாய்ப் புறத்திலடுத்திருப்பதாகவே கொள்ளப்படுமாதலால் கொங்கும் குடபுலமும் ஒருபுலமாகாதென்றேயுணரவேண்டும். ஒருபுலமாயிருக்குமாயின் அப்புலத்தினிடையே குறுக்காகக்கிடக்கும் குடக்குமலைத்தொடரை அப்புலத்துக்கு வேலியெனச்சிறப்பித்து நல்லிசைப் புலவர்கூறுங்கூற்றுப் பொருந்துவதாகுமா! குடவரையைக்குடபுலத்துக்கு வேலியென நல்லிசைப்புலவர் சிறப்பித்தமையால் அம்மலை அப்புலத்தின் இடைப்பட்டதன்றுமென்பதை "வருபுனலும் வாய்ந்தமலையும்" என்ற குறளில் வாய்ந்தமலையென்றதற்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரை *-யாலுமறியலாம்.

இங்குக்கூறியவாற்றால், குடவரைத்தொடராலும், கடலாலும் வேலிபோன்று வரையப்பட்ட கடன்மலைநாடே குடபுலம் என்பது பெறப்பட்டது.

இனிக் கொங்குநாட்டைக்கூறுமிடத்து, அது ‡ "கடல்போக்கி நிலமூன்றிற் குலவுசிறப்பெய்தியது கொங்குவளநாடு" எனக் கடலில்லாத நடுநாடாகவே பிரமாணத்துடன் வஞ்சிமாநகருடையாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இதுவேயுமன்றி, "வடக்குத்தலைமலையாம் வைகாவூர்தெற்குக்
குடக்குப்பொருப்புவெள்ளிக்குன்றம்—கிடக்குங்
களித்தண்டலைமேவுங் காவிரிசூழ்நாட்டுக்
குளிர்த்தண்டலையளவுகொங்கு'

என்ற பழம்பாடலாலும், கொங்கினை இடைநாட்டுள்ளதாகவே காட்டி அதனுட்கீழ்பாற் சோணாட்டினொருபகுதி சேர்ந்திருப்பதாகவே குறிக்கப்பட்டுள்ளது.

---

* "இடையதன்றியோருபுடையதாகலும், தன்வளந்தருதலும், மாரிக்கணுண்டநீர்கோடைக்கணுமிழ்தலுமுடைமைபற்றிவாய்ந்தமலையென்றார்" என்று பரிமேலழகர் விசேடவுரையிற்கண்டது.

‡ வஞ்சிமாநகர் 120-ம் பக்கம் பார்க்க.

இதுவே "கொங்கிளங்கோசர்தங்கள்நாடு" எனச் சேரநாட்டினின்றும் வேறுபட்டதாகச் சிலப்பதிகாரத்திலும், சேரகுலத்தவரான இளங்கோவடிகளாற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலாற் கடலில்லாத அகநாடாகிய கொங்கும், கடலுடைய புடைநாடாகிய குடபுலமும் தனித்தனி மாறுபட்ட வெவ்வேறிலக்கணங்களையுடையவாகி, இடையே கிடக்கும் குடக்கு மலை வேலியாலும் பிரிக்கப்பட்டு,வேறுபட்டுவிட்டமையால் அவை நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியுமாகிய எழுவாயும் பயனிலையுமாயியைவதற்கு ஒருவாற்றானும் பொருந்தாமையால், "கொங்கு குடபுலம்" என்று கூறுங்கூற்று "ஆ குதிரை" ¶ என்பதுபோல் அநந்நுவயமாய் அப்பிரமாணமாயிற்று.

இதுகாறும் செய்த வாதகக்ஷிமுடிவுரையின் ஏகதேசமான 'கொங்கு குடபுலம்' என்பதன் வாக்கியார்த்த விசாரணையாலேயே கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டமையால், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாகாதென்பதும் கூறவேண்டாதாயிற்று.

ஆயினும் கொங்கு குடபுலமாமென்பதற்கும், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாமென்பதற்கும் வாதகக்ஷியார், பிரமாணங்களாகக்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதகக்ஷிக் கனுகூலமான பிரமாணங்களுக்கு அசித்திசொல்வனவும் மிகப்பல்வுள்ளன. இனி அவற்றையும் முறையே ஆராய்வாம்.

திரு. நாராயணையங்கார்

பத்திராதிபர்.

¶ தருக்கசங்கிரகம் எ௨-ம் பத்தியிற்பார்க்க.

கடைச்சங்ககாலம்.

"செந்தமிழ்" (தொகுதி-கரு பகுதி-கக-ல்) ருகூஅ-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனி இரண்டுதொடரினுங்காணப்படுகின்ற ஜோதிஷக்குறிப்புக் களையாராய்வோம். "இருது இளவேனில்" என்பது சித்திரை வைகாசி மாதங்கள். "மேஷவிருஷபௌஸௌரோவஸந்த:" என்று போதாயனரும், "சைத்ரோவைசாகஞ்சவஸந்த:" என்று கௌடிலியரும் (அர்த்தசாஸ்திரம் p. 109) கூறுகின்றார்கள். 'எரிகதிரிடபம்' என்பது வைகாசி அல்லது இடபமாதம், 'மீனத்திடைநிலை மீனத்தகவையின்' என்பது நக்ஷத்திரங்களுள் நடுவிலுள்ள நக்ஷத்திரம். புத்தரது சரித்திரத்துட் பெரும்பாலும் வருவதும், அவர் ஜன்மநக்ஷத்திரமும் விசாகந்தான். ஆதலால் நடுநக்ஷத்திரமென்பது இவ்விசாகமே. அங்ஙனமாயின், இப்போதுவழங்குகிறபடியன்றிக் கிருத்திகாநக்ஷத்திரத்தை முதலதாகக்கொண்டு நக்ஷத்திரங்கள்தொடங்கினவென்றல்வேண்டும். தற்காலவழக்கில் முதல்நக்ஷத்திரம் அச்சுவினி. கி. பி. 500-க்கு முன்னெல்லாம் கிருத்திகாதிமுறைதான்வழக்கிலிருந்தது. கி. பி. 500-ல் மேஷாயனம் அச்சுவினியின்தொடக்கத்திலிருந்ததால் அச்சுவினியாரம்பத்தை மேஷாரம்பத்தோடுபொருத்துவதற்காகக் கிருத்திகாதிமுறையைக்கைவிட்டு அச்சுவினியாதிமுறையைக் கொண்டனர்.

இதனால் மணிமேகலை கி. பி. 500-க்குமுன்செய்யப்பட்டநூலென்பதுபோதரும். புத்தரதுகாலத்தில்வழங்கியமுறையைப்பற்றிக் கிருத்திகை யீண்டு முதல்நக்ஷத்திரமாகக்கூறப்படுகின்றதென்றும், மணிமேகலைநூலாசிரியரதுகாலத்து அவ்வழக்குவீழ்ந்து அச்சுவினிமுதலாகஎண்ணப்பட்டதென்றும் சொல்வதற்கு நூலில் ஆதாரமேயில்லை. அவ்வாறுதானிருந்ததுஎன்பதைச் சான்றுதந்துநிறுவ வேண்டும் பொறுப்பு பிள்ளையவர்களைச்சேர்ந்தது.

'ஒருபத்தின்மேலும்ஒருமூன்றுசென்றபின்' என்றதன்பொருளென்னை? கிருத்திகையிலிருந்து 14-ம் நக்ஷத்திரம்விசாகமாதலின்,

இவ்வரியும் இதற்கடுத்தவரியும்சேர்த்து விசாகமென்று ஸ்ரீசாமிநாதையரவர்கள்பொருள்கொண்டார்கள். மாதம், நக்ஷத்திரம், திதி இம் மூன்றுங்கொண்டு ஜன்மதினங்குறிப்பிடும்வழக்கில்லையாதலின் இப் பொருளேபொருத்தமுடையதாக இருக்கின்றது. மேலும் புத்தர் பிறந்தநாளில் பௌர்ணிமையாயிருந்ததேயன்றி, சுக்லசதுர்த்தசியன்று. மணிமேகலை மணிபல்லவத்துக்குச்சென்றவருஷத்திலும் புத்தராதுஜன்மதினத்தின் திதி

"மதிநாண்முற்றியமங்கலத்திருநாள்" (மணி X. 83).

என்றுகூறப்படுவதனால்பௌர்ணிமையென்பதுநிச்சயமாகின்றது.13-ஆம் தேதியென்று பிள்ளையவர்கள்பொருள்கொண்டார்கள். யாதேனும் ஓர்காலத்தைச்சுட்டுதற்கு, மாதம், திதி, நக்ஷத்திரம், இவற்றைக் குறிப்பது பண்டைவழக்கு. மாதம், தேதி, வாரம் இவற்றைக்குறிப்பது தற்காலவழக்கு. ஆசிரியர் தற்காலவழக்கையநுசரித்தவராயின் நக்ஷத்திரத்திற்குப்பதில் வாரத்தையன்றோசொல்லியிருத்தல்வேண்டும். அங்ஙனஞ்சொல்லாமையின், அவர்பண்டைவழக்கினையேயநுசரித்தவராதல்வேண்டும். ஆதலால் தேதிஇடம்பெறுதற்கு நியாயமேயில்லை. மேலும் 'ஒருபத்தின்மேலும் ஒருமூன்றுசென்றபின்' என்று கூறுவதால், 14-ம்தேதியென்றன்றோகணக்கிடுதல்வேண்டும். 13-ம் தேதிஎவ்வாறுவந்தது.

1616 வருஷங்கள்கழித்துப் புத்தர் மறுமுறைதோன்றுவரென்று நூலிற்கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும்இலங்கையிலும்பர்மாவிலும் சையாமிலும் வழங்குங்கர்ணபரம்பரையில்புத்தர் கி.மு. 544-ல் உலகுநீத்ததாகச்சொல்லப்படுகின்றது. தம்காலத்திற்குச் சுமார் 1200வருஷங்கட்குமுன்பு புத்தர்நிர்வாணமானதாகச் சிலபௌத்தர்கள்நம்பியிருந்தனரென்று ஹியூன்த்ஸாங் தெரிவிக்கின்றார். இது மேலேகாட்டப்பட்டகாலத்திற்குஒத்தேயிருக்கின்றது. 1200-640 560 கி. மு. (WatterII28) கி.பி.642-ல்நிகழ்ந்த பல்லவநரசிம்மவர்மனுக்கும் சளுக்கியபுலாகேசிக்கும் ஏற்பட்டயுத்தத்தைப் புத்தநிர்வாணத்திற்குப்பிறகு 1184—1193-ல்ஆண்ட இலங்கைத் தாதோபதிஸ்ஸன் II காலத்தில்நடந்ததாக இலங்கைமஹாவம்சமும், பூஜாவளியும் கூறுவதால் கி.பி.642ல் புத்தநிர்வாணம்(1184to1193)-642கி.மு. 543to 552-ல்,அதாவது கி.மு.544-ல்நடந்ததாகநம்பப்பட்டது. ஆகையால்

பண்டைக்காலத்தில் புத்தர் கி.மு.489-லோ அல்லது 544-லோ உயிர் நீத்ததாகத்தமிழர்நம்பினதாகக்கருதுவதற்கிடமுண்டு. (மஹாவம்சம் அத்தியாயம் 47-செய்யுட்கள்15,18,24IRAS1913pp.527-9) பிள்ளையவர்கள்இக்காலத்தை எடுத்தாளவில்லை. இதனைஎடுத்துக்கொண்டால் மணிமேகலையின்காலம் 1616–544–1073 கி. பி. அல்லது 1616 489-1128கி.பி. என்றுமுடியும். இதுஅவர்கள்கொள்கையோடு மாறுபடுதலின் சீனதேசகர்ணபரம்பரையில் வழங்கிவந்தகாலத்தை (கி.மு.850)எடுத்தாண்டனர். இவ்வாறு எடுத்தாளுதற்கு ஆதாரமின்னதென்பதுங்காட்டவில்லை. இன்னும் அக்காலத்தையும் கி.மு. 846என்றுதமதுசௌகரியத்திற்குஏற்றபடி திரித்துக்கொண்டார்கள். தமிழ் பௌத்தர்கள்தங்களுக்குள்வழங்கிவந்தகாலத்தைக்கைவிட்டுச் சீனதேசத்தில்வழங்கியகாலத்தைக் கைக்கொள்ளுதற்கு நியாயமென்ன? மேற்காட்டியவாற்றால் பிள்ளையவர்களதுவாதத்தொடரில் ஒவ்வொன்றும் அதிதுர்ப்பலமாயிருக்கின்றதென்பது பெறப்படும்.

கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினம் வழக்கில் இருந்ததில்லையென்றும், இம்முடிந்தமுடிபு கடைச்சங்கம் 2-ம் நூற்றாண்டு என்று சொல்வோரது கொள்கையோடு முரண்படுகின்றதென்றும், ஆதலின் அக்கொள்கைமுற்றும் பிழைபாடுடைத்தென்றும் பிள்ளையவர்கள் வாதிக்கின்றார்கள். இவ்வாதம் எத்துணைவலியுடைத்தென்பதனை இனி ஆராய்தல்வேண்டும். அவர்கள் "சிலப்பதிகாரநூலில் வாரதினம் சொல்லப்பட்டிருக்கின்றது என்ற ஒரு விஷயத்தைக் கொண்டே அந்நூல் கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன் றோன்றியிருக்கமுடியாதென்றும், கி. பி. 8-அல்லது 9-ம் நூற்றாண்டுவரையும் அதன் காலத்தை எதிர்பார்க்கலாமென்றும் நாம் நிச்சயித்தல் கூடும். ஏனெனின் டாக்டர் பிளீட்என்பவர் வாரதினங்களைப்பற்றி கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியர்கட்குத்தெரியாதென்றும், 8-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியாவில்எப்பாகத்திலும் அது பொது வழக்கில்இருந்ததில்லையென்றும் நன்றாகஸ்தாபித்திருக்கிறார்" என்று கூறுகிறார்கள். சங்ககாலத்தில் வாரதினம் வழக்கில் இருந்தது என்பதை நான்மறுக்கவில்லை. "நெருநற்றுச்சென்றாரெங்காதலர்யாமு மெழுநாளேமேனிபசந்து" என்றுபிள்ளையவர்கள்காட்டும்திருக்குறட் செய்யுளேயன்றி மணிமேகலையினின்றும் பலதொடர்கள்(VII-23-5,

106-8, XIII-14, XXII-72-4, XXIX-19; மேலும், சிலப். பதிகம் 50-63) அவ்விஷயத்தைவலியுறுத்துகின்றன. எழுநாளென்ற அளவிலே யாதொருபிரயாசமுமின்றி நினைத்தறியாமலே இனைத்தென அறியப்படாநாட்கள்கொண்ட வோர்காலத்தைக்குறிப்பிடக்கூடும்படி அத்துணைச்சர்வசாதாரணமாக வாரதினங்கள் வழங்கிவந்தனவென்று தோன்றுகின்றது.

பிள்ளையவர்கள் தேவாரத்தைமட்டும்பார்த்திருப்பார்களாயின் 8-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினங்கள் இந்தியாவில்வழங்கப்படவில்லையென்பதை ஒப்புக்கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் 2-வது திருமுறையில் 'வேயுறுதோளிபங்கன்' என்னும்பதிகத்தில் சம்பந்தமூர்த்திசுவாமிகள் "ஞாயிறு திங்கள்செவ்வாய்புதன்வியாழம் வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே ஆசறு நல்லநல்லஅவை நல்லநல்ல அடியாரவர்க்குமிகவே" என அருளிச்செய்திருப்பது லோகப்பிரசித்தம். சம்பந்தர்7-ம்நூற்றாண்டிலிருந்தவராதலின் வாரங்கள்அக்காலத்தில் சாதாரணவழக்கில் இருந்தனவென்பது நன்குணரக்கிடக்கின்றது. ஏனெனில் நாம்காட்டியமேற்கோளிற் கிரகவரிசை பூமியினின்றும் கிரகங்களின்தூரத்தின்பிரகாரம் சனி,வியாழன்,செவ்வாய், ஞாயிறு,வெள்ளி,புதன்,திங்களென்ற இயல்பானமுறையையல்லாது வாரமுறையைப்பின்பற்றிஇருக்கின்றது.

கி.பி.5-ம்நூற்றாண்டிற்குமுன் வாரங்கள் இந்தியாவில்வழக்கில் இருந்ததில்லை என்பதற்கு டாக்டர் ப்ளீட் காரணங்களாகத்தருவன இரண்டே. 1 'கி.பி.484க்குமுன்னுள்ளசாஸனங்களில் வாரநாட்கள் காணப்படாமை. 2' இக்காலத்திற்குமுந்தியதென்றுஒருதலையாய்நிச்சயிக்கப்பட்டநூல்களில் வாரநாட்களைப்பற்றி ஒன்றும்சொல்லப்படாமை.

கி.பி.484க்குமுன்னுள்ளசிலாசாஸனங்களில் வாரங்களைப்பற்றிச் சொல்லப்படவில்லையானால் அதினின்றுஊகிக்கக்கூடியதென்ன? காலங்காட்டாதசிலாசாஸனங்களில் வாரநாட்கள் சொல்லப்பட்டிருக்குமாயின் அவைகள் கி. பி. 484-க்குப்பின்வைக்கப்படவேண்டுமென்பதன்றி அக்காலத்திற்குமுன் இந்தியர்கட்கு வாரநாட்களேதெரியாதென்பது பெறப்படுமா? சிலாலேககர்களுக்குள் இம்முறையில் சில

யிலெழுதவேண்டுமென்னும்ஒருநியமனம் இருப்பது சகஜமல்லவா? சர்வசாதாரணமாய் வாரநாட்களை ஜனங்கள்வழங்கத்தொடங்கியபின்னும் பக்ஷம்திதிநக்ஷத்திரம் இவற்றால் காலங்குறிக்கும் பழையநியமனத்தைமாற்றி வாரத்தாற்காலங்குறிக்கும் புதுநியமனத்தை லேகர் அநுசரிப்பதற்குச் சிலநூற்றாண்டுகள்சென்றிருக்கவேண்டுமென்றுகருதுவது தவறாமா?

மத்ஸ்ய, பத்ம, விஷ்ணுபுராணங்களில் வாரத்தின்முறையிற் கிரகங்கள்வரையப்பட்டுள்ளன. (Matsya 93—10 to 20; Padma V. 78, 79, 82; Vishnu. I 12). இவைகளில் மத்ஸ்யபுராணம் கி. பி. 275—300-ல் இயற்றப்பெற்றது. (F. E. Pargiter's Purana text of the Dynasties of the Kali age M'rod. paras 48—52) வைகானஸசூத்திரத்தில் புதவாரமென்பது காணப்படுகின்றது. (Macdonell's Skt. Lit. p. 262). காளிதாசரது (கி. பி. 450) சாகுந்தளத்திலுள்ள 'வைகானஸ்பரிநிஷ்டிதா:' என்பதை ஸ்ரீநிவாசர் என்னுமுரையாளர் "வைகானஸஸூத்ரமேவவானப்ரஸ்தாச்ரமஸ்ய உக்தத்வாத்ததாச்ரமவர்த்திநாம்வைகாநஸத்வவ்யபதேச இதிபாவ:" வைகாநஸசூத்திரம்ஒன்றிலேயே துறந்தோரதுநெறிகூறப்படுதலானே வைகாநஸர்கள்என்றுஅழைக்கப்படுவார்கள் என்று விரித்து எழுதுகின்றார். இன்னும்மநுஸ்மிருதியில் (VI. 21)

"புஷ்பமூலபலைர்வாபிகேவலைர்வர்தயேத்சதா
காலபக்வை:ஸ்வயம்சீர்ணை:வைகாநஸமதேஸ்ம்ருத:"

என்று கூறப்பட்டுள்ளது. குல்லூகபட்டர்என்னும் பிரசித்திபெற்ற உரையாசிரியர் "வைகாநஸமதம். விகநஸப்ரோக்தம்ஸூத்ரம்வைகாநஸம். மதம்தத்ரஹிவாநப்ரஸ்தஸ்யதர்மஸ்யபூரண:உபதேச:" என்றெழுதுகின்றார் (M. Seshagiri Sastri's search for Sanskrit and Tamil Mss. II. p. 8). இதிலிருந்து மநுஸ்மிருதிக்குமுந்தியது வைகாநஸசூத்திரமென்றும் அந்தஸ்மிருதியில் அதுஎடுத்தாளப்பட்டிருக்கிறதென்றும் புலனாகின்றது. மநுஸ்மிருதி கி. பி. 270-ல் தோன்றியிருக்கவேண்டுமென்றுசொல்லுதற்கு நியாயங்களுள. ஆந்திரர்களுக்கு க்ஷத்திரியபதவிகூறப்படாமையேயன்றி, அவர்களை வைதேஹிகபுருஷர்களுக்கும் காராவரஸ்திரீகளுக்கும் உண்டான சம்

பந்தத்தாற்றேன்றியவரென்றும், மிகத்தாழ்ந்தஜாதியினரென்றும், கிராமங்களுக்குவெளியேவசித்துவந்தார்களென்றும், காட்டுமிருகங்களைக்கொல்லுதலே அவர்களதுகுலதர்மமென்றும் அதிற்கூறப்பட்டுள்ளது. (மநுஸ்மிருதி X. 36, 48). ஆந்திரர்கள் கி. மு. 230-முதல் கி. பி. 227-வரை அரசாட்சிபுரிந்துகொண்டிருந்தார்கள். ஆதலால் கி. பி. 227-க்குப்பின்னேதான் ஆந்திரர்களுக்கு மநுஸ்மிருதியிற்கூறியிருப்பதுபொருந்தும். மேலும் மநுஸ்மிருதியில் லிச்சிவிகள் 'விராத்யர்கள்' (பஞ்சமர்) என்றழைக்கப்படுகின்றனர். (X. 22). குப்தஅரசர்கள் தங்களை லிச்சிவிவம்சத்தினராகப் பெருமையுடன் சொல்லிக்கொள்வதினால், அவர்கள் இராஜ்பாதிகாரம்பெறுதற்குமுன்புதான் லிச்சிவிகளை இவ்வாறுசொல்லுதல்கூடும். குப்தர்கள் கி. பி. 320-ல் ஆட்சிசெய்யத்தொடங்கினர். ஆதலால் தற்காலத்திலிருக்கும் மநுஸ்மிருதி சுமார் கி. பி. 270-ல் தோன்றினதாகவேண்டும். (S. V. Ketkar's History of caste in India I. 65—6). ஆகையால் அதிலேஎடுத்தாளப்பட்ட வைகாநஸஸூத்திரம் கி. பி. 200-க்கு மிக்முந்தியதென்பதும், அக்காலத்துக்குமுன்னரேவாரநாட்கள் அறியப்பட்டிருந்தனவென்பதும் தெளிவாகின்றது.

மேலும்ஆரியதேவரென்ற பௌத்தநூலாசிரியர் தாமியற்றிய ஒருநூலில்(Published in I.A.S.B.1898)ராசியையும் வாரத்தையுங்குறிக்கின்றார். இவ்வாரியதேவர் நாகார்ஜுனருக்குச் சமகாலத்தவர் (I.A.O.S. XXXI 2+1). நாகார்ஜுனரின்சரித்திரத்தையும் அவர் இயற்றிய 'மஹாபிரஞாபாரமிதாசூத்திரவியாக்கியாசாஸ்திர'த்தையும் கி.பி.405-ல்குமாரஜீவர் சீனத்தில்மொழிபெயர்த்தனர். நாகார்ஜுனர் ஒருசாதவாஹனனுடன் ஒரேகாலத்திலிறந்தனரென்றும், அவருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனுண்டானென்றும் ஹியூன்த்ஸாங்(கி.பி.640)கூறுகின்றார்(Watters II207). சாதவாஹனனென்ற அடைமொழி கி.மு.230toகி.பி.227-ல்ஆண்ட ஆந்திரவரசருக்கே உரியது. நாகார்ஜுனருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனிருந்ததால் ஆந்திரரில் கடைசியான புலோமான் III (கி.பி.220-7) பட்டமெய்துவதற்குமுன்னரே அவர்இறந்திருக்கவேண்டும். அதாவது கி.பி. 220க்குமுன்னரே அவரிறந்திருக்கவேண்டும். அவர் கனிஷ்கனுக்குப்பின் காச்மீரத்தைஆண்ட அபிமன்யுவின்சமகாலத்தவர் எனக் கல்ஹ

ணர்கூறுவர்.(இராஜதரங்கிணி I. 173,177)அதற்கேற்ப நாகார்ஜுன ரியற்றியநூல்களிலும் கனிஷ்கன்,அவன்சமகாலத்தவரான வசுமித் திரர்,அசுவகோஷர்முதலானவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. (Watters II 204) மேலும் அவர்இயற்றிய 'மஹாபிரஜ்ஞாபாரமிதா சூத்திரவியாக்கியாசாஸ்திர'மென்பது கனிஷ்கன்கூட்டுவித்த புத்த சங்கத்தில் (கி.பி.100 Smith p 269) காத்தியாயனீபுத்திரரியற்றிய 'மஹாபிரஜ்ஞாபாரமிதாசூத்திர'த்தின் பாஷ்யமாகும். ஆகையால் நாகார்ஜுனர் கி.பி.100க்குப்பின்னும் 220க்குமுன்னும் அதாவது 2-ம்நூற்றாண்டில் ஜீவித்திருந்தனர். அவருக்குச் சமகாலத்தவரான ஆரியதேவரும் அந்த 2-ம் நூற்றாண்டிலேயே இருந்தவராதல்வேண் டும். அவ்வாரியதேவர்வாரதினத்தைக்கூறுவதால், வாரநாட்கள்சொல் லப்பட்டிருக்கும் நூல்களெல்லாம் கி.பி. 5-ம்நூற்றாண்டிற்குப்பின் வந்தவையாதல்வேண்டுமென்னுங்கொள்கை நிலைபெறாதென்பதும், கடைச்சங்ககாலம் கி.பி.2-ம்நூற்றாண்டென்பதற்கு வாரதினமொன் றைச் சிலப்பதிகாரங்கூறுவது ஓர்தடையாகாதென்றும் நன்கு தெளி யப்பட்டது.

இதுகாறுஞ்செய்த ஆராய்ச்சியானே கடைச்சங்ககாலம் கி.பி. 2-ம்நூற்றாண்டென்பது தெளியப்பட்டது. இனிச் சிலப்பதிகாரமணி மேகலைச்செய்திகள் நிகழ்ந்திருக்கக்கூடியவருஷங்கள் இன்னவெனச் சுட்டி வரையறுக்கமுயலுவோம். கண்ணகியைப்பிரதிஷ்டித்து விழவுகொண்டாடியசமயத்துக் கஜபாகு வந்திருந்தனனென்றும், அவன்கி.பி.154—187ல் ஆண்டான்என்பதும் காட்டப்பட்டது. மதுரை யெரியுண்டசமயத்தைப்பற்றிச் சிலப்பதிகாரத்திலேகொடுக் கப்பட்ட ஜோதிஷக்குறிப்புகளுக்கும் பொருத்தமானவை கி.பி.2-ம் நூற்றாண்டில் 11 வருஷங்களேயென்றும், அவை கி.பி.100,103,107 117,130,134,144,157,171,188,198என்பனவென்றும் கூறினோம். மதுரையெரியுண்டதற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் மத்தியில் 3வருஷங்களேசென்றனஎன்பது கீழேகாட்டுவேன். கி.பி.100முதல் 144முடியவுள்ளகாலமும் கி.பி. 188,198 இவ்விரண்டுவருஷங்களும் கஜபாகுவின்ஆட்சிக்காலத்திற்குப்புறம்பாகஉள்ளனவாதலின் அவை களைநீக்கினால், கி.பி.157,171ஆகியஇரண்டேவருஷங்கள் எஞ்சுகின் றன. இவ்விரண்டினுள் எதைக்கைக்கொள்வோமென்பதற்கு, சிலப்

பதிகாரத்திலும் மணிமேகலையிலுங்கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப்பரிசீலனைசெய்யவேண்டும். கோவலன் இறந்ததைக்கேட்டதும் மாதவிதானுந்துறந்து, மணிமேகலையையும் போதித்தானம்புரிகின்ருள். (சிலப்XXVII103-8) கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்யும்பொழுது, செங்குட்டுவன்தேவந்திகையைநோக்கி மணிமேகலை யிளையளாயிருந்துந் துறத்தற்குக்காரணம்யாதெனவினவுகின்ருன் (XXX1-5). மணிமேகலை ஆடவரணிந்துபெருநலனுகரும் பீடு பெறுபருவமடைந்தபொழுது (அவ்வாறுபருவமடைந்ததின்வருணனை XXX. 10—21-ல் விரிவாய்க்கூறப்பட்டுளது), மாதவியின்றற்றாய் மாதவியிடத்து மணிமேகலையையென்செய்யப்போகின்ருயெனக்கேட்ப, (XXX. 22–3), மாதவி தனதுமகளைத்துறவுபூணச்செய்தாளென்று தேவந்திகைகூறுகின்ருள் (XXX. 24—9). சிலப்பதிகாரம் XXX. 10—21 வரிகளைநோக்கினல் கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்தசமயத்து மணிமேகலை 14-வயதிற்குக் குறைந்திருக்கமுடியாது என்றறியலாம். மணிமேகலைநூலிலுள்ளசெய்திகள்நிகழ்ந்தகாலத்து அவளுக்குஎன்னவயதிருக்கலாமென்றுபார்க்கவேண்டும். அந்நூல் 3-ம் காதையில் அவளைப் பருவமங்கையாயிருந்தாளென்றுகூறுதலினல், 18-வயதிற்குள்ளாகத்தானிருக்கவேண்டும். உதயகுமரனென்னும் அரசிளங்குமரன் இவளைக்காதலித்து மணிமேகலைபருவமடைந்தனளோவெனச் சுதமதியிடத்துவினவுகின்ருன் (IV. 97—102). இதனல் குலத்தலைமக்களதுகண்வழிநுழைந்து கருத்தினையுருக்கும் பெண்ணலங்கனிந்தபருவத்தள்என்பதுபோதரும். இன்னும் "இளையள்வளையோள்என்றுனக்கியாவரும், விளைபொருளுரையார்" (மணி. X. 79—80) என்றுசொல்லப்படுவதும் அவளதுபருவமினைத்தென்பதைக்காட்டும். இதுகாறுங்கூறியவாற்றல் கண்ணகிபிரதிஷ்டைசமயத்து மணிமேகலைக்குவயது 14-க்குக்குறைந்திருக்கமுடியாதென்பதும் அவள்மணிபல்லவத்திற்குச்சென்றகாலத்தில் அவளுக்குவயது 18-க்குமேற்பட்டிருக்கமுடியாதென்பதும் ஊகித்தல்கூடும். ஆகவே இவ்விருசெய்திகட்கும்இடைப்பட்டகாலம் 4-வருஷங்கட்குமேற்பட்டிராதென்பது தெளியக்கிடக்கின்றது.

கண்ணகிபிரதிஷ்டைக்கு எவ்வளவுகாலத்துக்குமுன் கோவலனிறந்தானென்பதை இனிக்கவனிக்கவேண்டும். கோவலனிறந்து

சிறிதுகாலத்துக்குட் கண்ணகியும் மரணமானள். (சிலப். பதிகம் 50—3) கண்ணகி விண்ணுலகிற்சென்றஅதிசயத்தைக்கண்ணுற்ற மலைவாணர்கள், அப்போதுமலைவளங்காணுதற்பொருட்டுவந்திருந்த செங்குட்டுவனிடத்தில் அந்த அற்புதசம்பவத்தைத்தெரிவிக்கின்றார்கள் (சிலப். XXV. 57—61). மதுரையெரியுண்டதை நேரிற்கண்டு பின் வீரபத்தினிசென்றவழியே 14-நாளகத்து (சிலப். பதிகம் 51) சேரநாட்டுக்குவந்த சித்தலைச்சாத்தனரும் விவரித்துக்கூறுகின்றார். (சிலப். பதிகம் 41—3). தனதுதேவிபிரார்த்தித்தவண்ணம் கண்ணகியைப்பிரதிஷ்டித்தற்காக இமயத்தினின்றுங்கல்கொணருதற்பொருட்டுச் செங்குட்டுவன்வடநாட்டியாத்திரைசெல்கின்றுன். மலைவளங்காண்டற்காக வஞ்சியைவிட்டுச்சென்றதற்கும் வடநாட்டியாத்திரை கழிந்துசேர்தற்கும் இடைநின்றகாலம் 'எண்ணான்குமதியம்' (சிலப். XXVII. 149) அவ்வாறு வஞ்சியுட்புகுதற்குமுன்தான்சிறைபிடித்து வந்த ஆரியவரசரை மற்றைத்தமிழரசர்க்குக் காட்டிவரும்வண்ணம் வில்லவன்கோதையையனுப்பியிருந்தான். அவ்வாறே சோழ, பாண்டியர்களிடத்துச்சென்று ஆரியவரசரைக்காட்டிச் சேரன்செங்குட்டுவனதுவெற்றித்திறத்தை வில்லவன்கோதைவியந்தபொழுது, அவர்கள் இகழ்ந்துகூறியதுகேட்டு மனம்பொறுதவனய்த் தனதுஅரசனிடத்தில்நடந்தவற்றைச்சொல்லுதற்கு நேராகவருகின்றுன். இங்ஙனம் இவன்வந்துசேருதற்கு 3 அல்லது 4-மாதங்களுக்குமேற்சென்றிராது. செங்குட்டுவனிதைக்கேட்டதும், கோபங்கொண்டெழுகின்றுன். மாடலன் அவனதுகோபத்தைத்தணித்து ஆரியவரசரைச்சிறைவிடுக்கும்படிசெய்கிறுன். முன்னமேஎடுப்பித்திருந்தகோயிலில் இமயமலைக்கல்லாற்செய்தகண்ணகியைப் பிரதிஷ்டைசெய்கின்றுன். (சிலப். XXVIII. 224—234) இவ்வாறு செங்குட்டுவன் வடநாட்டியாத்திரைசென்றிருந்த 32மாதங்களுள் கண்ணகிகோட்டம்அமைக்கப்பெற்றது. அவன்திரும்பிய3,4மாதங்களில் கண்ணகிபிரதிஷ்டையுமாயிற்று. ஆகையால் கோவலன்மரணத்திற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் இடைநின்றகாலம் 3வருஷங்களேயென்றது பெறப்படும். மேல்வரும்XXIX-ம்காதையிற்கூறப்படுவனவற்றாலும் இதுஉறுதியடைகின்றது. அக்காதையுள்''காவற்பெண்டும் அடித்தோழியுங் கடவுட்சாத்தனுடனுறைந்த தேவந்திகையுமுடன்கூடிச் சேயிழையைக்

4

காண்டுமென்று மதுரைமாநகர்புகுந்து முதிராமுலைப்பூசல்கேட்டாங் கடைக்கலமிழந்துயிரிழந்த விடைக்குலமகளிடமெய்தி யையையவண் மகளோடும்வையையொருவழிக்கொண்டு மாமலைமீமிசையேறிக் கோமகடன்கோயில்புக்கு நங்கைக்குச்சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத்திற முரைப்பார்மன்" எனக் காணப்படுகின்றது. இதிற்சொல்லியிருக்குஞ் செய்திகளுக்கு 3 வருஷங்களுக்குமேற்சென்றிராது. 32மாதங்கள் என்று நூலகத்துக்காணப்படாமற்போயின், மிகக்குறைந்தகாலந் தான்சென்றிருக்கவேண்டுமென்று நினைக்கக்கூடியவிதத்திற்றான் செய்திகளுள்ளன. கண்ணகிபிரதிஷ்டைக்குப்பின்னால் மணிமேகலை நூலாரம்பத்திற்கூறப்பட்டசெய்திகள்வரை 4வருஷங்களுக்குமேலே சென்றிராது என்று முன்னர்க்காட்டப்பட்டது. ஆகவே கோவலன் மரணத்திலிருந்து மணிமேகலைநூலாரம்பத்திற்கூறப்பட்டசெய்திகள் வரை 7வருஷங்கட்குமேற்படாதுஎன்றேற்படுகிறது.

சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரத்திலே இந்திரவிழவுஇயற்றுதற்குப் புகார்நகரிலுள்ளோர் கோரிக்கைசெய்துகொண்டிருந்ததாக மணிமேகலைமுதற்காதைகூறுகின்றது. இந்திரவிழவாரம்பித்த முதல்நாளன்று மாதவியும்அவள்மகளும் நடனஞ்செய்தற்குவரவில்லை. நடனம் சாதாரணமாக மாலையில் அல்லதுமுன்னிரவில் நடைபெறும். அன்றுவாராமைபற்றி மாதவிநற்றாய்கவன்று உடனேவசந்தமாலையை மாதவியிடத்தனுப்புகிறாள் (மணிII 1-6). இவ்வாறுவசந்தமாலையை யனுப்பியது இந்திரவிழவின்2-ம்நாளாக இருத்தல்வேண்டும். இரண்டாங்காதையினும் ஏழாங்காதையினும் சொல்லப்படுஞ்செய்திகள் ஒரேநாளில்நிகழ்ந்தன. அன்றிரவிலேமணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திற்குஎடுத்துச்செல்கின்றது. எட்டாங்காதையில் மறுநாளுதயத்தைப்பற்றி (அதாவதுவிழவின்3-ம்நாள்)க் கூறியிருக்கிறது. (VIII 18) அன்றேமணிமேகலை மணிபல்லவத்தின் வளங்களையெல்லாங்கண்டு கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சிக்குச் சென்று ஆபுத்திரனது அக்ஷயபாத்திரம்பெற்று (காதைIX,X&XI) அன்றிரவிலேயே தனதுதாயிடத்துத்திரும்பிவருகிறாள். அன்று விசாகநக்ஷத்திரமும்பௌர்ணிமையும்சேர்ந்ததினமென்பது மேலே கூறப்பட்டது. II-ம்காதையிலிருந்துXIகாதைமுடியவுள்ள சரித

நிகழ்ச்சியினின்றும், மணிமேகலை தன்தாயைவிட்டு ஒருநாளேபிரிந்திருந்ததாக ஏற்படுகிறது. இதற்கேற்பத்தான் 'இன்றேழ்நாளிலிந்நகர்மருங்கே' (VII23–5) 'இன்றேழ்நாளிலிடையிருள்யாமத்து' (VII106-8) இவ்விரண்டுவரிகட்கும் 'மிஞ்சினால் 7நாளைக்குள்'என்றுயினும் அல்லது 'கொஞ்சநாளைக்குள்' என்றாயினும் பொருள் கொள்ளுதல்வேண்டும். வாரநாட்களைப்பற்றி யான்கூறியதைநோக்கினால், இரண்டாவதுபொருளேஏற்புடைத்தாமென்றுதோன்றுகிறது. சித்திரைவிசாகநக்ஷத்திரங்களுக்கிடையில் இரண்டேநக்ஷத்திரங்களுள்ளன. சித்திரையில்இந்திரவிழவெடுக்கப்பட்டது. விசாகத்தில் மணிமேகலைபாத்திரம்பெற்றது. இரண்டுநக்ஷத்திரங்களும் 1முதல் 3நாள்இடைப்பட்டாயினும், அல்லது28முதல் 30நாள்இடைப்பட்டாயினும்வருவனவேயன்றி ஒன்றுக்கொன்று 7நாளிடைப்பட்டுவருதலேமுடியாது. இந்தச் சோதிடஉண்மையும் 'ஏழுநாள்'என்பதற்கு யான்கொண்டபொருளையே பொருத்தமுடைத்தெனக்காட்டுகின்றது. இந்திரவிழவு சித்திரைமாதத்தின்கடைசியில் நடைபெற்றதெனவைத்துக்கொள்ளினும், மணிமேகலை பிக்ஷாபாத்திரம்பெற்ற புத்தரது பிறந்நாள் வைகாசி3-ம்தேதிக்குப்பின் இருக்கமுடியாது. இரண்டாம் நூற்றுண்டின்பிற்பகுதியில் கி.பி. 162,170,181,189,200 இந்தவருஷங்களிலேயே வைகாசிவிசாகம் முதன்மூன்றுநாள்களுக்குள்வருகின்றது. கி.பி.157அல்லது171-வதிலிருந்து ஏழுவருஷங்கட்குட்பட்ட ஒருவருஷத்தை மேற்குறித்தவருஷங்களினின்றும் தெரிந்தெடுக்கவேண்டும். கி.பி.162என்றஒருவருஷந்தான் பொருத்தமுடையதாயிருக்கிறது. இதனேடொத்துச் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமாயேற்படுவது கி.பி.157.

சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமும் மணிமேகலைச்செய்திநிகழ்ந்தகாலமும் முறையே கி.பி. 756 & 771 என்றுகணித்திருப்பது முற்றிலும்பொருந்தாதென்பதை மேலேநிரூபணஞ்செய்தேன். அவர்களதுகொள்கைப்படி சிலப்பதிகாரக்கதைநடந்து 15-வருஷங்கழிந்து மணிமேகலைக்கதை யாரம்பிக்கின்றது. ஆனால் எனதுஆராய்ச்சியினால் 7-வருஷங்களுக்கு மேற்படாதென்றுகாட்டினேன். ஆதலால்இக்காரணத்தாலும் அவர்கள்குறித்தகாலங்கள் பிழையாதல்தேறப்படும்.

எனதுமுடிபில்வந்தஇரண்டுவருஷங்களும் அடியார்க்குநல்லார் உரையைநீக்கி, நூனுட்கூறப்பட்டஜோதிஷநிபந்தனைகளுக்கெல்லாம் மிகப்பொருத்தமாயிருக்கின்றன. கி. பி. 157 சித்திரைமாதம் 27-ம் தேதியில் சித்திரைநக்ஷத்திரமும் சூரியோதயத்திற்குப்பின் 27-நாழிகை 49 பலமிருந்தது. இம்மாதத்திற்குமுந்திய பங்குனிக்கடைசி நாளில் சித்திரைநக்ஷத்திரம்சூரியோதயத்திலிருந்தது. ஆகையால் அன்றுகாமவிழவுமுடிந்தது. சித்திரை 27-க்குப்பின் 28-நாள்விழா நிகழ்ந்தது. ஆகையால் அது வைகாசி 24-ல்முடிபெய்தியது. அன்று கொடியிறக்கப்பட்டது. மறுநாள்(வைகாசி 25)நாட்கடலாடுதல்நடைபெற்றது. கோவலனும் மதுரையைநோக்கிப்பிரயாணமானுன். அன்று திங்கட்கிழமை, விசாகநக்ஷத்திரம், சூரியோதயத்திற்குப்பின் 42-நாழிகை 21-பலமிருந்தது; சுக்லபக்ஷத்து 14-ம்திதி சூரியோதயத்திற்கு 34-நாழிகை 8-பலத்துக்குப்பின் ருெடங்கிற்று. புறப்படுங் காலத்துத்திதியதுவாகையால் சந்திராஸ்தமனத்துக்குப்பின் சிறிது நேரம் இருட்டிருந்திருக்கவேண்டும். மேலும்மரணயோகம்இருக்க வேண்டுமென்றுநூல்கூறவில்லையாயினும், மேற்கூறிய வைகாசி 25-ல் புறப்படுஞ்சமயத்துநக்ஷத்திரம்அநுஷமாயிருந்தாலும் அந்நாளில்திங் கட்கிழமையும்விசாகநக்ஷத்திரமும் சேர்ந்துவருதலால் மரணயோக மிருக்கிறது. ஆடிமாதம் 29-ம்தேதி வெள்ளிக்கிழமை. அன்றுபரணி சூரியோதயத்திற்குப்பின் 58-நாழிகை 17-பலம் வரையிருந்தது. கிருஷ்ணுஷ்டமி சூரியோதயமாய் 47-நாழிகை 38-பலத்துக்குப்பின் ருெடங்கிற்று. மதுரைத்தேவிக்கும் கண்ணகிக்கும்நிகழ்ந்தசம்பாஷணத்தை நள்ளிருளில் (அந்நாள்நடுஇரவுவரைதான்இருட்டுஇருக்கும்) சாத்தனுர்கேட்டார். இதற்குஒருமணிநேரத்திற்குப்பின் பரணியும்அஷ்டமியுஞ்சேர்ந்திருந்தசமயத்து(சூரியோதயத்திற்குப்பின் 47-நாழிகை 38-பலத்துக்கும், 58-நாழிகை 17-பலத்துக்கும்இடையிட்டசமயத்தில்)மதுரையெரியுண்டதென்று நாம்ஊகிக்கலாம்.

இனி மணிமேகலைக்கதையையெடுத்துக்கொண்டால் கி. பி. 162 வைகாசிமாதம் முதல் அல்லது இரண்டாந்தேதியில் மணிமேகலை மணிபல்லவத்திற்குச் சென்றிருத்தல்வேண்டும். வைகாசி 1-ல் சூரியோதயமாய் 22-நாழிகை 22-பலத்துக்குப்பின் விசாகநக்ஷத்திரமும் 21-நாழிகை 15பலத்துக்குப்பின் பௌர்ணிமையுந்தொடங்கி

மறுநாட்சாயங்காலம் சுமார் 3-மணிவரையிருந்தன. ஆகையால் இரண்டுநாளிலும் விசாகமும்பௌர்ணிமையும் ஒன்று சேர்ந்தன. ஆகவே இந்திரவிழா சித்திரைமாதக்கடைசிநாளிலாயினும் அல்லது அதற்குமுந்தியநாளிலாயினும் ஆரம்பித்திருத்தல்வேண்டும். பிள்ளையவர்கள் கி. பி. 771-ல் வைகாசி 8-ல் இந்திரவிழாத்தொடங்கிற்றென்றார்கள். அப்போது சித்திரைமாதமாகவுமில்லை. சித்திரைநக்ஷத்திரமுமில்லை. பௌர்ணிமையுமில்லை. "சித்திரைமாதக்கடைசிக்கடுத்துள்ள பௌர்ணிமைக்குப்பக்கத்தானசனிக்கிழமை"யில் இந்திரவிழவாரம்பமென்று அவர்கள்கொண்டதின்பலன்இதுவேயாம்!

கோவலன்இறந்தது கி.பி. 157-ல்அல்லது171-ல் ஆதல்வேண்டுமென்றும் அவற்றுள் மணிமேகலைக்கதையாரம்பகாலத்தைநோக்கி கி.பி.157 தான் பொருத்தமுடையதென்பதும் மேலேபெறப்பட்டது. கி. பி. 171ஐ எடுத்துக்கொண்டால் அதனோடொத்தமணிமேகலைக்கதைக்காலமில்லாமையாலே அதுகொள்ளற்பாலதன்று. மேலும் அவ்வருஷத்துச் சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரம் 22-ம்தேதியில் சூரியோதயமாய் 55-நாழிகை 16-பலம் முடிய இருந்தது. விழா 28 நாள்நடந்தமையால் வைகாசி 19-க்குள்முடிந்திருக்கவேண்டும். 20-ம் தேதியில் நாட்கடலாட்டும் பிரயாணமுமிருந்தனவாதல்வேண்டும். ஆனால்அன்றுசனிக்கிழமையாதலின் கடனீராட்டுநிகழாது. 19-ம் தேதிபுறப்பட்டார்களென்றால் அன்று 14-ம்திதியேயில்லை. 21-லோ பௌர்ணிமை53-நாழிகை 51பலத்துக்குவந்துவிடுவதால், புறப்படுஞ் சமயத்து(அதாவது 58, 60-நாழிகைகளுக்கு இடைப்பட்டவைகறையிருட்டில்) திதிபௌர்ணிமையாய்விடும். ஆகையால் கி. பி. 171 பொருத்தமில்லாமை நன்குணரப்படும். இதுகாறுஞ்செய்தஆராய்ச்சியின்பயனாய்க் கோவலனிறந்தது கி. பி. 157 என்பதும், கண்ணகிக்குக்கோயிலெடுப்பித்துவிழவியற்றியது கி. பி. 160 என்பதும், மணிமேகலை மணிபல்லவத்திற்குமுதன்முதலாகச்சென்றது கி. பி. 162 என்பதும் துணியப்பட்டன. இதனால் கஜபாகுவின் (I) காலத்தைப் பற்றி முந்தியநூலாகியதீபவம்சம்சொல்வதுதான்சரியென்றும், மஹாவம்சங்கொடுக்குங்காலம்பிழையென்றும் உணருதல் கூடும். கி. பி 154-முதல் 176 முடிய, கஜபாகுஇருந்தவனவன். கண்ணகி பிரதிஷ்டைகாலத்தில் செங்குட்டுவனுக்கு 50-வயதாயிருந்ததென்று,

'நின்னல்யாண்டையைந்திரட்டிசென்றதற்பின்னும்'என்ற மாடலன் மொழிகளால்(சிலப். XXVIII. 129—30) உணரப்படும். ஆகை யால் செங்குட்டுவனதுஜனனகாலம் 160—50=110 கி. பி. அவன் 55 வருஷம்வீற்றிருந்தானெனப்பதிற்றுப்பத்து 5-ம்பத்துக் கூறும். அவன் 20-வயதிற்பட்டமெய்தினவனாயின் அவனது இராஜ்யகாலம் 130-முதல் 185-வரைஎன்றேறப்படும். சிலப்பதிகாரஇறுதிக்கட்டுரை யில் நெடுஞ்செழியன் செங்குட்டுவன்காலத்தவனாகச்சொல்லப்படுகி ரான். கோவலனைக்கொலைசெய்வித்தபாண்டியன் இவனேயாவன். இவ னும் கி. பி. 157-ல் இறந்திருக்கவேண்டும். இவன்மகன்வெற்றிவேற் செழியன் தனதுநாட்டினும்கண்ணகியைப்பிரதிஷ்டித்து வழிபாடியற் றினான். செங்குட்டுவன்காலத்தவன்சோழன்பெருங்கிள்ளி (சிலப். உரைபெறுகட்டுரை). சிலப்பதிகாரநூலாசிரியராகியஇளங்கோவடி கள் செங்குட்டுவனதுசகோதரர். அந்நூலுள்நிகழ்ந்தனவாகக்கூறி யிருப்பனவற்றை அவைகளைநேரிற்பார்த்தசாத்தனாரிடமிருந்து கேட் டுணர்ந்தார். இச்சாத்தனார்தாம் மணிமேகலையாசிரியர். இவர் நன் மாறனைப்(வெற்றிவேற்செழியனதுமறுபெயர்)புறம் 59-ல் புகழ்ந் திருக்கிறார். மணிமேகலைநூலிற்கூறப்பட்டசரிதம் சிலப்பதிகாரச்சரி தத்திற்குப்பின்நிகழ்ந்தபோதிலும் சிலப்பதிகாரத்துக்குமுந்தியநூல் மணிமேகலை. ஏனெனின், இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றி முடிந்தவுடன், மணிமேகலை துறவினையும் பாடுதற்குவிருப்பமுள ரென்றுசாத்தனாரிடஞ்சொல்ல அதற்குச்சாத்தனார் தாம் முன்னரே அதனைஇயற்றிவிட்டதாய்ச்சொல்லுதலின், ஒருவர்முன்னர்மற்றவர் அரங்கேற்றினர். (சிலப். பதிகம்-87—9, மணி. பதிகம்-95—8). சாத்தனார் கி. பி. 157-ல் மதுரையெரியுண்டதைநேரிற்பார்த்தவராக லின், அவரும்இளங்கோவடிகளும் கி. பி. 200-க்குமுன்மரணமடைந் திருக்கலாமென்றுகருதுதல் தவறாகாது.

சிலப்பதிகாரத்தில் XXI-ம்காதையில்வரி3-4ல், திருக்குறளி லிருந்து 'இன்னாசெய்யாமை'யதிகாரத்து 9-ம்செய்யுள் எடுத்தமைக் கப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் XXII. 59-61 ஒருகுறளை(55- வது) யேயிடைப்பெய்துவள்ளுவரையுங்குறிக்கின்றார். இதேகுறளைச் சிலப்பதிகாரத்துக்கட்டுரைகாதை முடிவுரைவெண்பாவில் எடுத்தா ளப்பட்டிருப்பதையும் காண்க. ஆதலால் இளங்கோவடிகட்கும்,

சாத்தனாருக்கும்முன்னிருந்தவர் வள்ளுவரென்பதும் கி.பி.150க்குப் பின் இருந்தாரென்றல்பொருந்தாதென்பதும் பெறப்படும்.

இனிக் கடைச்சங்கந்தொடங்கியகாலத்தைச் சற்றுக்கவனிப்போம். இடைச்சங்கத்திறுதியில் பாண்டியர் தலைநகராகியகபாடபுரம் கடல்கொள்ளப்பட்டதென்றும், அதனால் அக்காலத்திருந்தமுடத்திருமாறன் மதுரையைத்தலைநகராக்கி அங்கேகடைச்சங்கம் நிறுவினானென்றும் களவியலுரைகூறுகின்றது. அவ்வுரையிற்கூறப்படுவன முழுவதையும் அங்கீகாரஞ்செய்தற்கு ஏலாதெனினும் மேற்குறித்த கடல்கோட்செய்தியினை ஐயமின்றி யேற்றுக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. அதற்குச் சங்கநூலாதாரமுமிருக்கிறது. கீழேவருவனவற்றாற் பாண்டியநாட்டிற்சிறிதுபாகமாயினுங்கடலாற்கொள்ளப்பட்டதென்பதுதெளிவாகின்றது.

"மலிதிரையூர்ந்துதன்மண்கடல்வௌவலின்
மெலிவின்றிமேற்சென்றுமேவார்நாடிடம்படப்
புலியொடுவின்னீக்கிப்புகழ்பொறித்தகிளர்கெண்டை
வலியினான்வணக்கியவாடாச்சீர்த்தென்னவன்"

(கலித்தொகை-முல்லைக்கலி.)

"வடிவேலெறிந்தவான்பகைபொறாது
பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள" (சிலப்-காடுகாண்காதை)

கி.மு.2387-ல்இலங்கை இந்தியாவிலிருந்து கடலாற்பிரிக்கப்பட்டதென்றுஇலங்கைச்சரித்திரங்கள்கூறுகின்றன. சங்கநூல்களிற்கூறப்படுஞ்செய்திகள், இந்தியாவும்இலங்கையும்பிரிந்து வெகுகாலத்திற்கப்புறம்நிகழ்ந்தனவாகஅறியப்படுதலாயினும், தலைச்சங்கம்ஒன்றிருந்ததுண்மையாயின், அதன்காலங்கூடப் பாரதகாலத்தை (கி.மு.1287 Shama Sastri's Gavam Ayamamahabharata Asramavasika-parva)ஒட்டியிருந்தமையாலும், தமிழ்நூலுரைகளிற்கூறப்படுங்கடல்கோள் இதுவன்று. புத்தருக்கு39வருஷங்கட்குப்பின்னிருந்த(அதாவது450கிமு)பாண்டுவாஸாவின்காலத்தில்கன்னியாகுமரியையடுத்து இலங்கையின்தென்மேற்குப்பாகத்தில் வேறொருகடல்கோள்கூறப்பட்டுள்ளது (E. Tennan't Ceylon Vol. I & 7 fn). ஆனால்இக்கடல்கோளைப்பற்றி மஹாவம்சம்ஒன்றுங்கூறவில்லை. இதுநிகழ்ந்தது

உண்மையெனின் இவ்வளவுமுக்கியமான ஒருவிஷயத்தைச்சொல்லத் தவறுமோஎன்று ஆசங்கையுண்டாகின்றது. அதுஉண்மையாயிருப்பினும், தலைச்சங்கத்திறுதியினிகழ்ந்ததாய்க்கூறப்படும் கடல்கோளாகக்கருதலாம். திருநான்ஸீன்என்னும்பிக்ஷுவை ஹிம்ஸித்தபொழுது தேவர்களுக்குக்கோபமுண்டாயிற்றென்றும், அதன்பயனாயொரு கடல்கோளுண்டாயிற்றென்றும், அதுகொழும்புக்குப்பக்கத்திற் கலியாணியென்னுமாகாண முழுவதையும் அமிழ்த்திவிட்டதென்றும், இது நிகழ்ந்தது தேவாநாம்பிரியதிஸ்ஸாவின் பின்வந்த உத்தியாவின் பேரனாகிய திஸ்ஸாவின்காலத்திலென்றும் இலங்கைச்சரிதங்களிற்கேட்கப்படுகின்றன. பெரியதொருமாகாணமுழுவதையும் அமிழ்த்திய இக்கடல்கோள் பாண்டியநாட்டிலும்ஒருபகுதியைஅமிழ்த்திருக்கலாமென்பது மிகவும்பொருத்தமே. இராஜாவளியினும் (II 180,190) மஹாவம்சத்தினும் (XXII) இக்கடல்கோள்கூறப்பட்டிருக்கின்றதாகையால் இதனைஉண்மையென்றேகொள்ளுதல்பொருந்தும். உத்தியா, புத்தருக்கு276-வருஷங்களுக்குப்பின் 286-வருஷமுடிய இலங்கையில்ஆட்சிசெய்தான். அதாவது கி.மு.213-203 உத்தியாவின் பேரன் காலத்துநிகழ்ந்ததாகக்கடல்கோள்கூறப்பட்டமையால்கி.மு.200க்குச் சமீபத்தில்உண்டாயிருக்கலாமென்று தோன்றுகிறது. தொல்காப்பியத்திற்குப்பாயிரம்உரைத்த பனம்பாரனார், அந்நூலை'ஐந்திரம் நிறைந்ததொல்காப்பியம்'என்றும், அது'நிலந்தருதிருவிற்பாண்டியனவையத்து' அரங்கேற்றப்பெற்றதோர்இலக்கணம்என்றும் கூறுகின்றார். கடல்கோள்ஒன்றேதமிழ்நூலிற்கூறப்படுவதாயின், அது இடைச்சங்ககாலத்திறுதியில் நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்து நிகழ்ந்ததாதல்வேண்டும். களவியலுரையும்முடத்திருமாறன்காலத்துநிகழ்ந்ததாகக்கூறும். ஆதலின்,நிலந்தருதிருவிற்பாண்டியனும்,இம்முடத்திருமாறனும்ஒருவனேபோலும் (Sen Tamil III 271-83; XIV 417-38; 465-74). அங்ஙனமாயின் தொல்காப்பியம் கி.மு.200க்குச்சமீபத்திற்றோன்றியதென்றேற்படும். ஆகவே கடைச்சங்ககாலம் கி.மு.200 முதல் கி.பி.200வரை எனப் பெறப்பட்டது.

இவ்வியாஸத்தைத் தமிழில்எழுதிமுடித்தற்கு எனதுநண்பர் S. வையாபுரிப்பிள்ளையவர்கள்புரிந்த உதவி ஒருநாளும் மறக்கற்பாலதன்று. இதிற் சொற்பிழைகள்அநேகம்இருத்தல் கூடும்; அவைகள் எனக்குரியவையேயன்றிஎன்நண்பருக்குரியனவல்ல. அவைகளைத் தயவுசெய்துபொறுத்தருளுமாறு செந்தமிழபிமானிகளை விநயத்துடன் வேண்டுகின்றேன்.

கே. ஜி. சங்கரையர்.

2. வானியாறு.

இனி 'வானியாறு' என்பதைப்பற்றிச் ஸ்ரீமான் ரா. இராகவையங்காரவர்கள் கொண்ட கருத்தை நோக்குவாம்.

(1) செந்தமிழ்த்தொகுதி (கரு) பகுதி (எ)இல் (௩௯௩)-ஆம் பக்கத்து—"அவர் 'ஆனிவானி யான் பொருந்தமாகும்' என்ற திவாகரநிகண்டினையும், 'மாதவனார் வடகோங்கின் வானியாற்றின்' என்ற தேசிகர்வாக்கினையுமுணராராவர், இவற்றால், ஆன்பொருந்தம் ஆதலையும், அதுவே வானியெனப்படுதலையும் தெரிந்துகொள்க" எனவும்,

(2) ஷை தொகுதி, பகுதி (அ)இல் (சசகூ)-ஆம் பக்கத்து—"வானி ஆன் பொருநைக்குப் பெயரென்பது......உணரலாம். 'வடகொங்கின் வானியாற்றின்' எனவரும் தேசிகப்பிரபந்தத்தாலிது கொங்கிடத்தது புலனும்" எனவும்,

(3) ஷை தொகுதி, பகுதி (கூ)இல் (சஅக)-ஆம் பக்கத்து—"இவ்வான்பொருந்தமாகிய வானியாறு, கொங்குநாட்டுள்ளதென்பது 'கொங்கின் வானியாற்றின்' எனத் தேசிகப்பிரபந்தத்துவருதலானறிந்தது......இவற்றால் கொங்குநாட்டில் வானியென்னும் பெயருடையதும்,........ஆகிய ஆன்பொருந்தத்தின் கரையிலே சேரன் அழியாத கருவூருண்மை புலனும்" எனவும் கூறியிருத்தலால்

ஆம்பிராவதியே வானியாறு எனவும், அதுவே வேதாந்ததேசிகர் குறித்ததெனவும் ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் நிச்சயமாய்க்கருதிவிட்டமை போதரும். இது மாறுகொளக்கூறியதாம்.

இங்குத் தேசிகர்கூறிய 'வானி' வேறு; ஆம்பிராவதியும் வேறு என்பதே யுணரவேண்டும்.

I. தேசிகர் கூற்று.

முன்னையது (வானி) வடகொங்கிலுள்ளது; பின்னையது (ஆம்பிராவதி) தென் கொங்கிலுள்ளது. முன்னையது சத்தியமங்கலத்தி

லோடுவது; பின்னையது கருவூரிலோடுவது. இவ்வானியைக்கூறும் தேசிகர்பாடல்—

"கோதவமொன்றில்லாததகவேகொண்ட
கொண்டலெனவந்துலகிலேவர்க்கன்றேர்
தூதுவனுயொருகோடிமறைகளெல்லாந்
தொடர்ந்தோடத்தனியோடித்துயரந்தீர்த்த
மாதவனூர்வடகொங்கின்வானியாற்றில்
வண்ணிகைநன்னடங்கண்டுமகிழ்ந்துவாழும்
போதிவைநாம்பொன்னயிந்தைநகரின்முன்னாட்
புணராதபரமதப்போர்பூரித்தோமே"

(பரமதபங்கம் ருரு) என்பதாம்,

ஒன்றை மற்றொன்றாகக்கொண்டு மயங்காமைப்பொருட்டே யப் பெரியாரும் வாளா "வானி" யென்றொழியாது "வடகொங்கின் வானி" யெனத்தெளிவுறுத்தினர்.

இனிக் கொங்குநாட்டின் எல்லைகூறும் ஓர் பழம்பாட்டு*

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்றம்—கிடக்குங்
களித்தண் டலைமோதுங் காவிரிசூழ் நாட்டுக்
குளிர்த்தண் டலையளவு கொங்கு" எனக் கூறுகின்றது.

இதிற் கூறும் வடவெல்லையாகிய தலைமலையென்பது, கோயமுத்தூர்ச் சில்லாவில் முற்குறித்த சத்தியமங்கலந்தாலூகாவிலுள்ளது. இதனையடுத்தது மைசூர்ப்பிரதேசம். ('சாமராஜ தாலூகா'வும் 'குண்டல்பேட்டைதாலூகா'வும்.) இச்சத்தியமங்கலத்திற்றான் வைணவப்பெரியாராகிய தேசிகர் "மகிழ்ந்து வாழ்"ந்தனர். இவ்வூரில் அவர் வசித்தனர் எனற்கு அவரது சரித்திரங்கூறுவதாகிய 'தூப்புல் வேதாந்ததேசிகன் வைபவப்பிரகாசிகை' என்ற நூலிலிருந்து

(i) "......தேசிகர் கோயிலினின்றும்புறப்பட்டுச் சத்தியமங்கலத்தில் நித்தியவாசம் பண்ணினர்"

---

* அனந்தபுரம் 'சில்லாக் கலெக்டர்' ஆயிருந்த நிக்கல்சன் துரை வெளியிட்ட 'Coimbatore District Manual' புத்தகத்தில் சில பிழைகளோடு காணப்படும் செய்யுள் இது. "வடக்குப்பெரும்பாலை" என்றும் பாடபேதம்.

(ii) "சத்தியமங்கலத்தில் கந்தாடை இலட்சுமணாசாரியார் தேசிகரைச்சரணமடைந்தார்"

(iii) "தேசிகர் தமது தேவியாரையும், குமாரரையும் சத்திய மங்கலத்திலிருக்கும்படி நியமித்துக் கோயிலேறச்சென்றார்"

(iv) "சுதரிசனபட்டருடைய பிள்ளைகளிருவர்க்கும் உபநயனாதிகளையும்......பிரசாதித்துத் தேசிகர் சத்தியமங்கலத்திலிருந்தார்"

(v) "தேசிகர் திருநாராயணபுரத்திலிருந்து சத்தியமங்கல மேறவெழுந்தருளியிருந்தார்"

(vi) "சத்தியமங்கலத்தில் தேசிகருக்கு அழகியமணவாளன் சொப்பனங்காட்டியருளினான்" என்பன கிடைக்கின்றன.

[இன்றும் பிரபலமான ஒரு வைணவாலயம் இவ்வூரிலிருக்கின்றது. கொங்குநாட்டிற் பாடல்பெற்ற திவ்வியதேசம் இல்லையென்பதை யித்தலம் ஒருவாறுவிலக்கிநிற்கின்றது "மாதவனார் வடகொங்கின் வானியாற்றின்" என அவர் கூறியது இத்தலத்தைக்குறித்துப் போலும். அவர் இத்தலத்தில் வசித்துத் தமது மதத்தாபனம் பண்ணினர் என இங்குள்ளவைணவர் யாவரும் ஒப்புவர்.]

இச்சத்தியமங்கலத்திலோடுவது வானியாறே. தூப்புற்பிள்ளை கூறுவதும் இதுவே. ஆதலால், "வடகொங்கின் வானியாறு" வானியாறே. ஒருகாலும் ஆம்பிராவதியாகாது.

ஆம்பிராவதியோ தென் கொங்கிலுள்ளது. கொங்கு நாட்டின் தெற்கெல்லை முற்குறித்தபடி வைகாவூர் (பழனி). இதற்கும் ஆம்பிராவதிக்கும் ஏறக்குறைய (௩௦)மைல் இருக்கும். இதற்கு வடக்கேயின்னும் (௧௫௦) 'மைலு'க்கு மேலும் பரந்துள்ள கொங்குநாட்டின் பரப்பையும் அறியாது, "வடகொங்கு" எனத் தூப்புலார்குறித்த அடையையும் எண்ணாது இவ்விருவேறு நதியினையும் ஒன்றென்பது, மயங்கி மொழிவதொன்றேயாம்.

கொங்குநாட்டின் எல்லையினையும், தேசிகர் சரிதத்தையும் கொண்டு நோக்குங்கால் தேசிகர்கூறும்வானியாறு ஆம்பிராவதியன்றென்பது தெளியப்படும்.

II. இவற்றின் நிலை.

இவற்றுள் வானியாறு:—கோயமுத்தூர்ச் சில்லாவின் வடமேற்கில் நீலகிரிமலைத்தொடரிலுற்பத்தியாகி 'மாயாறு' முதலிய உபநதி கலந்து, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் பவானி 'தாலூகா'க்களிற்பாய்ந்து திருநணுவிற் காவிரியிற்கலக்கும் ஒரு சிவநதி. இந்தச் சில்லாவில் நீர்பாய்ச்சலில் நிகரற்றது. இதன் பெயர் வானியேயாகவும் வடமொழிவாணர் இதற்குப் 'பவானி'யென வழங்குவித்தனர் எனினும், தமிழ்மக்கள்யாவரும் 'வானி'யென்றே யின்றும் வழங்குகின்றனர். இவ்வாற்றின்கரையில் எதிரெதிருள்ள இரண்டூர்கள் 'மேல்வானி' 'கீழ்வானி' என்றழைக்கப்படுவதை இன்றும் அறியலாம். இற்றைக்குச்சற்றேறக்குறைய மூந்நூறு வருடங்கட்குமுன்னிருந்த இளையான்கவிராயர் என்னும் சிறந்த தமிழ்ப்புலவர் தாம் பாடியருளிய அவிநாசித்தலபுராணத்தே, சுந்தரச்சருக்கத்தில்—

"தடமுனிவன்றூனுரையகலாமுத்தமிழ்நாடு
கடகரியுங்கானகமுமருதகவினுடு
துடகில்வருங்காவிரிபுதுவானிக்கோழநாடு
திடநிலைகுன்றுவடபரிசாரத்திருநாடு"* (உ௰) என அருளிச்செய்ததுங்காண்க.

ஆம்பிராவதியாறு:—கோயமுத்தூர்ச் சில்லாவின் தென்மேற்கில் ஆனைமலையிலுற்பத்தியாகிக் 'குடவனாறு' $ 'சண்முகநதி' முதலிய உபநதிகள் கலந்து உடுமலைப்பேட்டை, தாராபுரம், கருவூர்த் 'தாலூகா'க்களிற் பாய்ந்து கருவூருக்குக்கிழக்கே கிட்டத்தட்ட (க௦) 'மை'லுக்கப்பால் காவிரியிற்கலப்பது. இவ்வாறு வெவ்வேறே புறங்கிடக்கும் இரண்டாற்றினையுமொன்றென்ப தெவ்வாறுபொருந்தும்?

"ஆரமணியாரமணியாரமணிவாரிநெடு
வாரியிடுங்குடவமாநதியான் (விறலிவிடுதூது)
"கன்னியமுனையொடுகங்கைகலந்ததுபோற்
பொன்னிகலந்தபுனற்குடவமாநதியான் (காதல்)

எனச் சுப்பிரதீபக்கவிராயர்குறிக்கின்றார்.

---

* கொங்குநாட்டின் உண்ணுடுகள் உ௪-இல் வடபரிசாரநாடு என்பதும் ஒன்று.

$ பதிற்றுப்பத்துரைகாரர் குறித்தது (பதிற்றுப்பத்து-௯௦.)

III. பதிற்றுப்பத்து.

இனிப் பதிற்றுப்பத்தில்—

"வானிநீரினுந், தீந்தண்சாயலன் மன்றதானே" என்னும் (அசு)-ஆம் பாட்டிற்குறித்தது, ஆம்பிராவதியென்பதைக்காட்டிலும் வானியென்பதே மிகப் பொருந்துவதாகும். ஆம்பிராவதியோ வருடத்தில் (௨௰௧கக௪) 'ஏகர்'களை விளைவிப்பது; வானியோ வருடத்தில் (௨௬அ௨௬) 'ஏகர்'களை விளைவிப்பது *. ஆம்பிராவதி இடையறு தொழுகாதநதி; (கருவூரிடத்தே சிலகாலம் வறண்டுநிற்கும்.) வானி, இடையறுதொழுகும் ஒரு சீவநதி. கொங்குநாட்டிலுள்ள யாறுகளிலெல்லாம் சிறந்தது வானியொன்றே. இந்நாட்டைப்பொறுத்தமட்டிற் காவிரியையும் இதற்குப் பிந்தியதாகத்தான் கூற வேண்டும்.

ஆதலின் பெருங்குன்றூர்க்கிழார் (பதிற்-அசு) பயனிற்சிறந்து, இடையறுதொழுகுவதும், (புனைபெயராகாமல்) வானியென இயற்பெயருடையதுமாகிய ஆற்றினையே குறித்தாரென்பது மிகப் பொருந்தும்.

IV. நிகண்டு.

இனிப் பிங்கலநிகண்டுடையார் "ஆனிவானியான் பொருநை பொருநை சூதநதியான் பொருந்தமாகும்" எனக்கூறி யொன்றை மற்றொன்றாகக்கொண்டு மயங்கற்குக்காரணமாய்ப் பழிபூண்டாரே யெனின், அவரும் அப்பழி தமக்குச்சாராவண்ணம் 'பொருநை' யென மற்றொரு பெயரும் அதற்குக்கூறித் தப்பித்துக்கொண்டனர். 'பொருநை' யென்ற மாத்திரத்தானே

"திரைபடு பொருநை நீத்தம் செவிசிபோல் வளர்க்குமாதோ" (திருவிளை, பாண்டித்திருநாடு-கரு) எனப்பரஞ்சோதியாரும்,

"பூமணக்கும்பொழின் மணக்கும்பொழிற்கெழில்கூர்தருமுகமாய்த்
தூமணக்குமொருபொருநைத்துறைப்புனல்பாய்வளத்ததுவாய்
நாமணக்கும்புகழ்படைத்துநலமணக்கும்புலமணக்குந்
தேமணக்குந்தமிழ்மணக்குந்தென்பாண்டித்திருநாட்டில்" (சிறப்புப்பாயிரம்) என மகாவித்துவான் பிள்ளையவர்களும் ஆம்பிராவதியையே கூறினர் எனக் கொள்ளமுடியாதன்றே!

* Coimbatore District Manual

இனித்திவாகரமுடையாரும் "ஞானிவானியான் பொருந்தமாகும்" என்றனரேனும் "பலபொருளொருசொற்பணிப்பர்சிறப்பெடுத்தே" யென்னுமிலக்கணங்கருதி யப்பழிக்கு விலகினராவர். சூடாமணியாரும் "வடகொங்கின்வாணி"யெனக்கிளந்தோதி யவர்க்குமப்பழிசாராவண்ணங்காத்தனர்.

ஆகலின் நிகண்டுபெற்றியும் இவ்விரண்டாற்றினையு மொன்றெனல் சாலாதென்பது.

இவற்றால் வானியாறும், ஆம்பிராவதியும் வேறென்பதும், தேசிகர்குறிப்பு இதுவென்பதும், பதிற்றுப்பத்தும் நிகண்டுங்கொண்டு ஒன்றை மற்றொன்றாகத் திரித்துணரற்கில்லையென்பதும் பெற்றாம்.

இவ்விடயத்தில் தேசிகர்வாக்கைத் தம் செலவிற்குத்துணையெனக்கொண்டும், ஸ்ரீமான். ரா. இராகவையங்காரவர்கள், ஒருமுறைக்கு மும்முறையாக வழுக்கியதுவியப்பே.

பிழைதிருத்தம்.

சென்றமீ ச் செந்தமிழில் வெளிவந்த 'செங்குன்றூ'ரென்னும் வியாசத்தின்றலைப்பைச் 'செங்குன்றூரும் வானியாறும்'என மாற்றியும், ஈற்றில் 'தொடரும்' என்ற வார்த்தையைக்கூட்டியும் (௬௪௪) பக்கத்து கவுண்டரவர்கள் எனக்குறைத்தும் படிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

அ. கந்தசாமிப்பிள்ளை,

தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,

கோயமுத்தூர்க்கலாசாலை.

பேரூர்.

நந்தர் நிதியம்.

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ"

என்னும் அகநானூற்றுட்கண்ட மாமூலனார்பாடலை ஆதாரமாகவைத்துக்கொண்டு ஸ்ரீமத், இராகவையங்காரவர்கள் பாடலிபுரம் கி.பி. 5-7-ஆம் நூற்றாண்டுக்கிடையில் கங்கைமாநதியின் திடும்பிரவேசத்தால் அழிந்துபோயிற்றென்றும், அவ்வழிவு 5-ஆம் நூற்றாண்டையொட்டியே நேர்ந்திருத்தல்வேண்டுமென்றும், ஆதலின் மாமூலனாரும் செங்குட்டுவனும் அவ்வைந்தாம் நூற்றாண்டிலேயே இருந்தவராதல்வேண்டுமென்றும் தமது 'சேரன்-செங்குட்டுவன்' என்ற அரிய ஆராய்ச்சிநூலில் கூறியுள்ளார். ஸ்ரீமத் K. S. சீனிவாசபிள்ளை அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 15, பகுதி 1-இல் ஐயங்கார்கூற்றுக்களை ஆட்சேபித்துப் பலகாரணங்கள்காட்டி மறுத்திருப்பதுடன் மேற்காட்டிய அகநானூற்றுச்செய்யுட்குப் பிறிதோர்உரைசெய்திருக்கிறார்கள். அவ்வுரையே மிகவும் பொருத்தமானதென்பதை அவர் எடுத்துக்காட்டியுள்ள முன்னாளில் ஈழமுதலிமயம்வரைப் பெருவழக்காகவிருந்த நந்தன் நிதியங்குழூவியகதையும், நிதியங்கரந்தகதையும் நிரூபிக்கின்றன. சமீபத்தில்வெளிவந்துள்ள 'சந்திரகுப்தன்'என்ற ஆந்திரநூலுள்ளும் இக்கதைகள்காணப்படின், பிள்ளையவர்கள் அநுமானப்படி மாமூலனார் தம் காலத்தில் பெருவழக்காக நாடெங்கும் வழங்கிவந்தவோர் கதையையே சுட்டியிருத்தல்கூடுமெனத் தெளியலாம். 'சந்திரகுப்த'னென்ற நூலுட் பின்வருமாறு வரையப்பட்டுள்ளன.

"மகாபத்மன் மிக்கதனவந்தன். இவனிடத்தில் மகாபத்மதனமிருந்தமையால் அப்பேர் வந்ததென்பர். நூறுகோடிகொண்டது ஒருபத்மம். ஆயிரம்பத்மங்கொண்டது ஒருமகாபத்மம். இவன் தனதுவீரத்தால் நிலைநிறுத்திய மகதாராஜ்யத்திலிருந்து வரி, கப்பம், காணிக்கைகளைத் தயாதாட்சண்யமின்றிக் கவர்ந்துதனத்தைக்குவியல்குவியலாகச் சேமித்துவைத்துவந்ததால் மிக்கதனவானெனப்பட்டான். தான்சேகரித்தநிதியத்தை இவன் கங்காநதியில் ஐந்து

அறைகள்அமைத்து அவையிற்றில் புதைத்துவைத்தானென்பர். கங்கையாற்றின்குறுக்கே ஒருபுறம்அணையிட்டு வெள்ளத்தைத் திருப்பித் தரைவெளியானவிடத்தில் ஐந்துகுழிகளைவெட்டிப் பலமான 5 கல்லறைகள்சமைத்துத் தனதுதனத்தை அவ்வறைகளில் நிரப்பி உருக்கியஈயத்தால் அவ்வறைகளைமூடிப் பிறகுஅணையை யுடைத்து வெள்ளத்தைஎப்போதும்போவதுபோலச்செய்யவே அவ்வறைகளின்மேலேயே கங்கைநீரோடியதாம். இந்தரகசியம் வெளியாகாவாறு அவ்வேலையை முக்கியமாகவிருந்துநடத்தினோர்களைக் கொலைபுரிந்துவிட்டானென்று மோர்கதையுள்ளது.

இக்கதை ஆதாரமில்லாக்கூற்றன்றென்பதும் கன்னபரம்பரையாகவழங்கிவந்த ஓர்புராதனக்கதையென்பதும் வெளிப்படை. ஆந்திரர்க்குள்ளும் இவ்வாறுவழங்கிவந்தகதையை மனதில்வைத்துக் கொண்டு மாமூலனார்பாட்டைப்படிப்போர்க்கு அதன் உண்மைப் பொருள் வெளியாகலாம். கங்கைநீர்முதல் என்பதற்குக் கங்கையின் நட்டாறென்றே பொருள்கோடல் ஏற்புடைத்தாகும்.

"பல்விதப்புகழ்நிறைந்த வென்றிமிக்கபோரில்வல்ல
நந்தர்சீர்மிகுந்த தமது பாடலிபுரத்திற்குவித்துப்
பின்னர், கங்கையாற்றின் நடுவில்மறைத்துவைத்த
நிதியந்தானோ" என்பதே அப்பாட்டின் பொருளெனத் தோன்றுகிறது.

ஆர். ரெங்காசாரியர்.

தமிழ்ச்சங்கங்களுக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும்,

ஐயரே,

சென்ற பிங்களஹூ ஆனிமீ ௯௨ (23—6—1917)ல் சென்னைப் பச்சையப்பர்கல்லூரித் தமிழ்ப் போசிரியர் ஸ்ரீமான் தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சங்கத்தின் ஆறுவதாண்டுத் திருவிழாக்காலத்தில், இச்சங்க உறுப்பினர் ஸ்ரீமான் எம். எஸ். கலியாணசுந்தரமையர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, கும்பகோணம் ஸ்ரீமான் ஆர். வேங்கடராமையங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஆங்குக்கூடியிருந்த தமிழ்மக்களால் ஒற்றுமையுடன் முடிவுசெய்யப்பட்ட தீர்மானம் வருமாறு:—

'தமிழ்ப்பெரும் புலவர்களின்பெருமைகளையும், அவர்கள் தமிழகத்துக்குச் செய்து போந்த உதவிகளையும் நினைவுகூர்ந்து, ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும் ஆண்டுகள்தோறும் 'அவர்கட்குத் திருவிழாக் கொண்டாடி வரவேண்டும்'

உ. இத்தீர்மானத்தில் $\frac{\text{தங்கள் சங்கத்திற்கும்}}{\text{தங்களுக்கும்}}$ சம்மதமிருக்குமென்று நம்புகிறேன்.

ங. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில், தமிழ்ப்புலவர் ஒவ்வொருவர் திருநாளையும் எல்லாச் சங்கங்களும் கொண்டாட முயல்வது சாத்தியமின்றிப் போயினும் போகலாம். ஆதலால்,

(க) எவ்வெப் பெரும்புலவர்க்குத் திருவிழாக் கொண்டாட வேண்டுமென்பதையும்,

(உ) அவ்வத்திருவிழாக்களை எவ்வெந்நாட்களிற் கொண்டாடலாகுமென்பதையும்,

(ங) எவ்வெப்புலவர்க்கு எல்லாச் சங்கங்களும் ஒருபடியாகத் திருவிழாக் கொண்டாட வேண்டுமென்பதையும்,

(ச) எவ்வெப்புலவர்க்கு எவ்வெவ்விடங்களில் திருவிழாச் செய்யப்படலாமென்பதையும்,

(ரு) இத்திருவிழாக்களை எவ்வெம்மாதிரிக்கொண்டாடலாமென்பதையும்,

முன்னர் நிச்சயித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆகையால் இவைசம்பந்தமாகத் $\frac{\text{தங்கள் சங்கத்தின்}}{\text{தங்கள்}}$ ஆலோசனையைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் நன்றியுள்ள,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,

சங்கத்தலைவர்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

*மங்களவாழ்த்து.

வெண்பா.

பண்டு தமிழ்வளர்த்த பாண்டியர்போ லம்மொழிக்குத்
தொண்டு புரியரசர் தொல்குலத்தான்—எண்டிறலான்
ஸ்ரீராஜ ராஜேந்த்ரச் செம்மல் மகிழ்ந்தழைக்கும்
சீரார் தலைவா செயம். (1)

பெற்றோர் தவம்விளங்கப் பேருலகிற் பேர்விளங்கக்
கற்றோ ருளமுங் களிகூரச்—சொற்றோறும்
போத நறவம் பொழியுஞ் சிவசாமி!
வேதமறை யோர்திலக மே. (2)

பொன்னி நதிபோற் பொருள்வளமுந் தண்பொருநை
அன்ன தெளிவும் அரசவை—முன்னேறும்
சொல்வளமும் வாய்ந்த சுகுணா தமிழகம்நின்
நல்வரவை நாடும் நயந்து. (3)

கூடிக் குலவிக் குவலயத்து வாழ்வமெனத்
தேடித் தெரிந்துனையே சேர்ந்தனதம்—பீடார்
நலங்கள் துலங்கிடவோர் நாயகனை நாடிக்
குலங்கல்வி செல்வங் குணம். (4)

சென்னைக் கலாசங்கம் சீரா நடைபெறநம்
மன்னற் குறுதுணையா மந்திரியே—நின்னைத்
தலைவனென ஏற்குந் தமிழ்மொழிக்குத் தக்க
நிலைபெருமை ஈத்துவந்தாய் நீ. (5)

பன்னிப் பலவாற்றாற் பாடிப் பராவுதலென்?
உன்னிற் றமிழுரிமை யுன்னதே—என்னெனில்நின்
தாய்மொழியும் அஃதே தகைமைசால், ஆரியமாம்
தூய்மொழிக்கும் அஃதே துணை. (6)

---

* ஸ்ரீமான் Sir. P. S. சிவஸ்வாமி ஐயர் B.A., B.L., K. C. S. I. அவர்கள் ாநாயகத்தின்கீழ், திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்ன் 16-வது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டத்தன்று படிக்கப்பெற்றது.

வேறு.

அன்னதமிழ் மொழியதனை யாதரிப்பா ரின்னாளில் அரிய ராக, மன்னவர்தம் ஆங்கிலமே மாண்புடைத்தென் றெல்லோரு மதிப்பா ராகக், கன்னனிகர் தமிழ்மொழியைக் கல்லாது மாந்தரெலாம் கடிந்து பேச, அந்நிலைகண் டகமுருகி யதன்குறைதீர்த் திடநினைந் தான் இவன்யா ரென்னின். (7)

காலமிடஞ் செயலோர்ந்து கருமந்தேர் கலைவாணன் கருணை தோய்ந்து, சீலமலி செம்மனத்தன் செந்தமிழ்ச்சீர் பாவிக்கும் சேது வேந்தன், பாலரவி யெனவ்வருநம் பாற்கரவேள் புலவர்மிடிப் பனியை யோட்டி, ஞாலமதிற் றமிழ்மொழிக்கு நிலைநாட்டி உரமூட்டு நலமிக் கோனே. (8)

எண்ணியதோ பெருங்கருமம் ஏற்றமிகு துணையிலதேல் இயலா தென்றே, பண்ணயமார் பைந்தமிழ்த்தேன் பாவலரோ டுறுதினமும் பருகும் வள்ளல், புண்ணியமே யுருக்கொடுவந் துலகினிடைப் போந் ததெனப் புனிதர் போற்றும், கண்ணியன்பாண் டித்துரைவே ளருந் துணையக் காவலனும் கருதி னானே. (9)

பாண்டியனென் றுலகேத்த வருபாண்டித் துரைவள்ளல் பணி நன் கேற்றே, வேண்டியபல் சாதனமும் விழைந்தீட்டி மேதக்கோர் வினையும் கூட்டி, ஆண்டகையே தலைமைபூண் டருந்தமிழை யாதரி த்த ஆல வாயென், றீண்டுதமிழ்ச் சங்கமதை நாட்டினான் இரும் புகழு மீட்டி னானே. (10)

பூதவுடல் போக்கியவன் புகழ்பூண்டு பொன்னுலகம் புக்க பின் னர், நாதனிலாக் குறைதீர்ப்பான் நல்லோர்கள் சங்கத்தின் நன்மை நாடிச், சேதுபதி குலதிலகன் சீராஜ ராஜேந்த்ரச் செம்மற் சார்ந்து, கோதறநின் குலத்தவர்க்குக் குவலயத்துத் தமிழ்வளர்த்தல் கோட்பா டென்றார். (11)

ஆங்கவரும் எடுத்துரைப்ப அதற்கிணங்கி அவைத்தலைமை அணிந்து நாளும், ஓங்கிவளர் சங்கத்தின் உயர்நலங்கள் பலவாற்றா னுய்த்து நோக்கிப், பாங்குறுதொல் கேள்வியரைப் பக்கத்துத்

துணையாகப் பரிந்து கூட்டித், தேங்குலவு தமிழ்மொழியைச் சீராஜ ராஜேந்த்ரன் சிறப்பித் தானே. (12)

வளமலிநந் தமிழ்ச்சங்கம் வளர்ந்தீரெட் டாண்டெய்தும் வரிசை கண்டே, களமருவுங் கடுவுடையான் கலசமுனி களிப்பமணங் காட்டு மூதூர், அளவுபெற வருமெண்ணன் கறமியற்றி யுமையான்பா லமரு மூதூர், உளமகிழ்பு தமிழ்மொழியி னுரிமையேற் றுயர்ந்தரவோ ருறையு மூதூர். (13)

ஆயனரும் பத்தியறிந் தரனவற்கன் றருட்காட்சி யளிக்கு மூதூர், நேயமுற வளர்சாலி நிமிர்ந்தோங்கி வான்றடவு நெல்லை மூதூர், சேயினது வரவேற்குந் தாயெனவே செந்தமிழ்க்குச் செங்கை நீட்டித், தூயமுக நகைகோட்டி யகங்காட்டுங் களிப்பினை யென் சொல்வே னம்மா! (14

வாழ்த்து.

நீராரு மதிவேணி நிமலன் காப்ப
நெல்லைவள மாநகரார் வாழி வாழி
சீராஜ ராஜேந்த்ரச் செம்மல் வாழி
சிவசாமி நான்மறையோன் வாழி வாழி
சீரார்நந் தமிழ்ச்சங்கஞ் செழித்து வாழி
செங்கதிரோ னொளிமறையாச் சிறப்புற் றோங்கப்
பாராளு மைந்தாம்ஜார்ஜ் அரசன் வாழி
பகைவிட்டித் தகைநாட்டும் பதவி வாய்ந்தே. (15)

என். வி. சுந்தரராஜ ஐயர், B.A., L.T.,

உதவிக்காரியதரிசி,

தமிழ்ச்சங்கம்,

மதுரை.

* மங்களவாழ்த்து.

கலிவெண்பா.

மானிருக்குங் கையான் மதியிருக்குஞ் செஞ்சடையான்
றேனிருக்குங் கொன்றைச் செழுந்தாரான்—வானிருக்கும்
இந்திரனு மேனை யிமையவரு முய்வதற்கா
வெந்திறலார் காள விடமுண்டோன்—கந்தமலர்ப்
பாதந் தனைப்பணியும் பாண்டித் துரையெனும்பேர்
நாதன் றமிழ்காக்கு நாதனு—வோதுதமிழ்ச்
சங்கம் மதுரையினிற் றாபித்துத் தன்பெயரெங்
கெங்குஞ் சிறக்க விசைநிறுவி—யிங்கொருவான்
கற்பகம்போல் வைகிக் கவிஞருக்குக் காஞ்சனந்தந்
தற்பகலா தாண்ட வருளாளன்—சொற்பெறுதன்
பூதவுட னீத்துப் புகழுடல்வைத் தேகியபின்
றாதுறையு முல்லைத் தடந்தோளான்—மேதினியின்
மூவேந்தர் காத்த முதுதமிழ்நா டாளவந்த
கோவேந்தன் சேது குலவேந்தன்—பாவேந்தர்
தெள்ளு கவித்தேன் செவிக்கினிதா மாந்திநித
முள்ள முவந்தருளு மொப்பிலான்—பிள்ளைமதிப்
பெம்மா னமரர் பெருமான் பதம்பரவி
யிம்மா நிலத்தி லெழிலியெனக்—கைம்மாறு
வேண்டா தவாவர்தம் மெய்ப்பாடு கண்டருள்வோன்
வேண்டாரும் வேண்டும் விறல்வேந்தன்—ஈண்டாளு

---

* ஸ்ரீமான். Sir. P. S. சிவஸ்வாமி ஐயர் B.A., B.L., K. G. S. I. அவர்கள் சபாநாயகத்தின்கீழ், திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 16-வது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டத்தன்று படிக்கப்பெற்றது.

மால்ராஜ ராஜேச் வரமுத்து ராமலிங்க
வேல்வேந் திறைமைக்கண் மேவுறுநன்—னூலாய்ந்த
கற்றோர் திகழ்ந்து கவினுறுமிச் சங்கமுயர்
வுற்றோங்குங் கொற்ற முணாரார்—மற்றிதுவிங்
காண்டு பதினா றடைந்து வளர்சிறப்பைப்
பாண்டி வளநாட்டிற் பல்வளனு—மீண்டிநல
மோங்கி யெம்மையா ளுடையான் மணக்கோலந்
தாங்கிப் பொதியத் தவனுவப்பத்—தேங்கமல
மன்னும் விதிமுதலாம் வானவருங் காண்பரிய
தன்னந் தனிக்காட்சி தந்ததுவு—முன்னரிய
முன்னவனைச் சேர்ந்து முழுமூ வுலகின்றுங்
கன்னியெனச் சொல்லுங் கயற்கண்ணி—முன்னொருநாள்
நண்ணார் புரமெரித்த நாயகனோ டெண்ணியற
மெண்ணான்குஞ் செய்துற் றிருப்பதுவும்—பண்ணார்நூல்
வல்ல புலவர்பலர் வாழ்ந்துதமி ழாய்ந்துசிறந்
தெல்லையிலா வின்புற் றிருப்பதுவு—நெல்லையெனப்
பன்னூலுங் கூறும் பதியிதனிற் கொண்டாட
வென்னூலுங் கற்றிங் கிறைமாட்சி—தொன்னூன்முற்
சொல்லு முறைசெய் துரைத்தனத்தார் நல்லவையின்
வல்ல மதியமைச்சின் மாண்போனும்—பல்கலைஞர்
சார்ந்து திகழ்சென்னைச் சர்வகலா சங்கத்தி
னார்ந்த தலைமை யதிபதியும்—வேந்தர்தரு
பட்டமுமேம் பாடும் பலபலபெற் றோனுமென
மட்டில்புகழ் பெற்று வளர்குரிசில்—கட்டவிழ்பூம்

பொன்னுறையு மார்பகத்தான் போல்வான் சிவசாமி
யென்னும் பெயர்சே ரெழின்மறையோன்—பன்னுதமிழ்
வாழ்வெய்தச் சங்க மகிழ்வெய்த வண்டமிழோர்
தாழ்வின்றிச் சூழ்ந்து தவிசெய்த—நீள்சபையின்
அக்ரா சனம்வகித்தா னுதலினிச் செந்தமிழ்நா
டெக்கால முஞ்சிறக்கு மென்பேமாற்—றக்கோனிந்
நல்லோன் வரவுபெரு நல்வரவ தாகுகவிங்
கெல்லா நலனுமொருங் கெய்திடவிந்—நல்விழாச்
சீர்பெறச்செய் நெல்லைத் திருநகரா ரெந்நாளும்
பேர்பெறுநல் வாழ்வு பெரிதடையப்—பார்புகழுஞ்
சங்கந் தழைக்கத் தமிழ்தழைக்கச் சேதுமன்னர்
தங்க ளரசுரிமை தான்றழைக்கத்—துங்கமிகும்
மாராஜன் ஜார்ஜு மஹாமண்ட லேஸ்வரன்றன்
சீராரு மாட்சி தினந்தழைக்கப்—பேராரும்
நெல்லை நகர்தழைக்க நீணிலமெல் லாந்தழைக்க
வல்லபரன் றுள்வாழ்த்து வாம்.

சு. நல்லசிவன் பிள்ளை,
எழுத்தாளர்,
தமிழ்ச்சங்கம்,
மதுரை.

உ

ஸ்ரீராமஜெயம்.

திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பதினாறு வருஷோத்ஸவக்கொண்டாட்டப்பேரவையின்கண் நெடுவை வித்வான் திரு. இராமஸ்வாமி ஐயங்காரியற்றிய,

சங்கவாழ்த்துப்பா.

நேரிசையாசிரியம்.

அறந்தலையெடுப்பச்சிறந்தவில்லேந்து
ஆழியொருடமுழிமுதல்வனும்
பெருந்தகைதன்பால்வருந்திவருதல்கண்
டகங்குளிர்ந்தொலியான்முகமன்கூறியுங்
கண்படைகொள்ளவொண்புல்லுதவியும்
துன்றலைக்கரங்கொடுமன்றவருடியுந்
தூயபேரணைசெயவாய்துறைகாட்டியும்
நன்றறிமாந்தரினென்றப்புரிதலின்
எத்திசையிலுமெமக்கொத்தனரிலையென்
றேக்கழுத்தங்கொளீஇ மேக்கெழுந்துமுழங்குந்
தென்பாற்புணரிதன்மருங்குடுத்த
சேதுகாப்புடைமைத்திதினன்னாட்டுத்
திருமாவியனகரொருமாமுகவையிற்
பாடுநர்தமக்கேகோடுபலதரூஉம்
மூவாவண்மைத்தேவாதிபரிற்
பரிதிதன்பால்வருதிருவனிவனென
யாருந்தேறப்பாரிற்பல்லோர்
மிடிவல்லிருளைப்பொடிசெய்பாற்கர
னொளிவளர்கொழுந்தெனக்களிதருமகவாய்
வந்தவதரித்தசுந்தரச்செம்மால்
முத்தமிழாதியமெத்துகலைவளர்தலின்
மறுவிகந்தொளிருமதிபெரிதுடையோய்
வாய்மையுமன்புந்தூயநல்லொழுக்கும்
பெட்புறயாரினுமொட்பமுற்றொளிர்வோய்!

வலிகெழுமவுணர்தொலையவடர்த்த
அரிமாவுகைக்கும்பெரியோள் இணையடி
வழிவழிபேணும்பழிதபுமனத்தோய்!
மாவைப்பதியார்தேவைப்பதிவாழ்
நுதல்விழிநாட்டத்திறையோன்றன்னையும்
புல்லைமேவியதொல்லைமாலையும்
அன்புடன்போற்றுமின்பவாசக
முத்தணிகருக்கொள்நத்தூர்தென்கடற்
சேர்ப்பனென்றுதியகோப்பமைபல்பெயர்
தங்கட்கேயெனப்பொங்கப்படைத்தோய்
ஈழமுங்கடாரமுமிணையடிப்படுத்திய
சோழர்கடுணையெனத்துலங்குபெருவரிசையோய்
எந்நாட்டினருந்தன்னாட்கொளுமுகங்
கண்டுகொள்பெருமைகொண்டுயராச!
மேற்றிசையாளர்போற்றிடல்செய்யும்
அறனவில்ஆட்சித்திறனவையேறிக்
கனமாம்பெயர்புனைதனமாநிருப!
இத்தகையாயவுத்தமநலஞ்சேர்ந்து
நீதுபதியாச்சேதுபதியாம்
ராஜராஜேசுவரநல்லபிதான
நாந்தகவுழவ! நினாந்தகவுரைக்கின்
தமிழ்தோன்றிடனாவலைமதருபொதியமும்
தமிழ்திளைந்தாடியவிமிழ்திரைவையையும்
தமிழ்விற்றிருக்குஞ்சங்கமுஞ்சங்கத்
தமிழுருயோகுசெய்தண்கடற்பாங்கரும்
பிறவுந்தமிழாப்பெற்றசீர்ப்பாண்டியர்
உரிமையிற்புரந்தபெருமைத்தமிழ்ப்பயிர்
சின்னாட்டியர்செய்கையிற்றீயப்
பின்னாளன்னவரென்னத்தோன்றிய
பாற்கரனுடன்சேர்நூற்கடன்மடுத்த
பாண்டித்துரைமுகிலீண்டுமதுரை
ஓங்கலினிதிமழையுதவிநீங்குதலும்

விப்பிரகுலத்துறுசுப்பிரமணியனும்
வேலியும்பிரியச்சாலவுமுயங்கித்
தாளறச்சாயநீண்முடிதாங்கி
வளநீராயகுளநீர்பாய்ச்சிப்
பேரவைச்செறுவுளாரநடுதல்செய்
தடர்களைகளைந்துமிடைதரப்பாரித்
தாண்டுகடோறுநீண்டிடவளர்த்தே
நெல்வேலியினினிமிரக்கொணர்ந்துமுன்
சங்கம்வளர்த்ததுங்கப்புலவராம்
திரிபுரம்பொடித்தபெருமையோனும்
குன்றுகூறெறிந்தவென்றிவேளும்
ஒருங்கமைந்தினிதிவணுற்றமைபோல்வரு
தவசாமிகள்தொழூஉஞ்சிவசாமிப்பெயர்
உயர்வொப்பில்லாமயர்விலோன்றலைமையின்
இந்நாட்சொற்பயனெவர்க்குநல்கிளையால்
வீறுகொள்தமிழ்பதினாறெனும்பருவ
முற்றுநற்பதியைப்பெற்றபெற்றியினால்,
கொடுங்கூற்றிடரொரீஇத்திடம்பெறநிலைத்த
மிருகண்டளித்தவொருமகவென்ன
வாழியநாளும்வாழியவேந்தே?
நின்றமிழ்த்தலைமையுந்துன்றுநின்புதல்வரும்
ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும்
நீங்காச்சங்கந்தாங்குநற்றுணையாம்
பெத்தாச்சிப்பெயர்பெறுஞ்சீமானும்
காரியத்துதவிசெய்சிரியலாளரும்
சங்கவித்வத்தங்கத்தினரும்
தமிழறிபிறருநிமிர்திரைவளாகத்
தாழிதோறோங்கிவாழ்கென்ன
வாழிமாதவன்றாள் வாழ்த்துதுமியாமே

சுபம் சுபம் சுபம்

நெடுவை வித்வான். திரு. இராமஸ்வாமி ஐயங்கா

தமிழாசிரியர்.